# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 23 வள்ளுவர் ஆண்டு 2039 மாசி 25 சனிக்கிழமை (08.03.2008) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 103


# கிழக்கு மாகாண சபைக்கான தேர்தல் அறிவிப்பு 16ஆம் திகதி!

## வெசாக் முடிந்த 4 நாள்களில் வாக்களிப்பு

கொழும்பு, மார்ச் 08

கிழக்கு மாகாண சபைக்கான தேர்தல் பற்றிய அறிவிப்பு அடுத்த வார இறுதியில் - பெரும்பாலும் எதிர்வரும் 16ஆம் திகதியன்று - உத்தியோக பூர்வமாக வெளிவரும் என்று தெரிகின்றது.

தேர்தலுக்கான வாக்களிப்பு அனேகமாக, எதிர்வரும் மே மாதம் வெசாக் தினம் முடிந்து சில நாள்களில் - அனேகமாக மே 23ஆம் திகதி - இடம்பெறும் என்றும் அறிய வருகின்றது.

அரச உயர்வட்டாரங்களில் இருந்து கிடைத்த வழிகாட்டுதல்களை அடுத்து, அதற்கேற்ப தேர்தல் நடவடிக்கைகளை மேற்படி நாள்களில் முன்னெடுக்கத் தேர்தல் ஆணையாளர் திணைக்களம் தயாராகி வருகின்றது எனத் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன.

கிழக்கு மாகாணத்தில் மட்டக்களப்பு

(12ஆம் பக்கம் பார்க்க)

## மட்டு. தேர்தல் பிரசாரம் நேற்று நள்ளிரவுடன் முடிவு

கொழும்பு, மார்ச் 08

நாளை மறுதினம் மட்டக்களப்பு மாவட்டத்தில் நடைபெறும் உள்ளூராட்சித் தேர்தல்களுக்கான சகல பிரசாரங்களும் நேற்று நள்ளிரவுடன் முடிவுக்கு வந்தன.

பிரசாரங்கள் நேற்று நள்ளிரவுடன் முடிவுக்கு வருகின்றமை குறித்து சம்பந்தப்பட்ட அனைத்து அரசியல் கட்சிகளுக்கும் சுயேச்சைக் குழுக்களுக்கும் அறிவுறுத்தப்பட்டிருப்பதாகத் தேர்தல்கள் ஆணையாளர்

(12ஆம் பக்கம் பார்க்க)

## சிவநேசனின் இறுதி நிகழ்வு மல்லாவியில் நடைபெறும்

கிளிநொச்சி,மார்ச்.08

நேற்று முன்தினம் கிளைமோர் தாக்குதலில் உயிரிழந்த யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கி.சிவநேசனின் இறுதி நிகழ்வுகள் நாளை ஞாயிற்றுக்கிழமை மல்லாவியில் இடம்பெறும் எனத் தெரிய வருகின்றது.

சிவநேசனின் பூதவுடல் நேற்று முன்தினம் இரவு கிளிநொச்சி வைத்தியசாலையில் இருந்து மல்லாவி, யோகபுரம், 3ஆம் யூனிற்றில் உள்ள அவரது குடும்பத்தவர்களின் இல்லத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டது.

அங்கு அவரின் பூதவுடலுக்கு விடுதலைப்புலிகளின் தளபதிகள், போராளிகள் உட்பட பெரும் எண்ணிக்கையான மக்கள் அஞ்சலி செலுத்தி வருகின்றனர்.

(12ஆம் பக்கம் பார்க்க)

## மன்னார் முகாம்களிலிருந்து நேற்றுக் கடும் ஷெல் தாக்குதல்

மன்னார், மார்ச் 08

மன்னாரிலுள்ள தள்ளாடி, சௌத்பார், வங்காலையின் தோமஸ்புரி மற்றும் நானாட்டான் ஆகிய படை முகாம்களில் இருந்து நேற்றுமுன்தினம் இரவு 7.15 மணிமுதல் நேற்று மதியம் 12.30 மணி வரை விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளான அடம்பன் மற்றும் மாந்தை மேற்கு ஆகியவற்றை நோக்கி சரமாரியான ஷெல் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன என்று கூறப்படுகின்றது.

இந்தத் தாக்குதல்களை ஒட்டி நேற்றுக்காலை 7 மணிமுதல் 11 மணிவரை மன்னார் - மதவாச்சிக்கிடையிலான பாதை மூடப்பட்டிருந்தது.

இதேவேளை, மன்னாரிலிருந்து வெளியிடங்களுக்குச் செல்ல ஆயத்தமான வாகனங்கள் எவையும் நேற்றுப் பிற்பகல் வரையும் மன்னாரில் இருந்து புறப்பட அனுமதிக்கப்படவில்லை.

வவுனியா மற்றும் மதவாச்சியிலிருந்து மன்னார் நோக்கிச் சென்ற வாகனங்களும் முருங்கன் பகுதியில் தடுத்து நிறுத்தப்பட்டு படையினராலும் பொலிஸாரினாலும் கடும் சோதனைக் குட்படுத்தப்பட்டன.

(சி)

## சிவநேசனுக்கு மாமனிதர் விருது

கிளிநொச்சி, மார்ச்.08

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கிட்டினன் சிவநேசன் தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வே. பிரபாகரனினால் 'மாமனிதர்' என்ற அதிஉயர் விருது வழங்கி மதிப்பளித்து கௌரவிக்கப்பட்டுள்ளார்.

தமிழீழ விடுதலைக்காகவும், தமிழ்த் தேசியத்திற்காகவும் அர்ப்பணிப்போடு பணியாற்றிவந்தமைக்காக புலிகளின் தலைவர் மாமனிதராக மதிப்பளித்துள்ளார்.

இது தொடர்பாக விடுதலைப் புலிகளின் தலைவர் நேற்று விடுத்திருக்கும் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

தமிழீழ மண்ணையும் மக்களையும் ஆழமாக நேசித்த மகத்தான மனிதர் ஒருவரை இன்று சிங்களம் அழித்துவிட்டது. தமிழினக் கொலைப் பரிமாணத்தின் உச்சமாக திட்டமிட்ட இந்தக் கோரக் கொலை நிகழ்ந்திருக்கிறது. அரச பயங்கரவாதத்தின் அசிங்கமான வடிவமாக வன்னி மண்ணிலேயே இந்தக் கொடுமை அரங்கேறியிருக்கிறது.

கிட்டினன் சிவநேசன் சுயநலம் கருதாது, நேர்மையுடனும் நெஞ்சுரத்துடனும் செயற்பட்ட தனித்துவமான மனிதராவார். உயர்ந்த உள்ளங்கொண்ட எளிமையான மனிதர். புனிதமான அரசியலாளர். தொழிலாளர்களின் நலன்களுக்காகவும் மேம்பாட்டுக்காகவும் அல்லும் பகலும் அயராது

(12ஆம் பக்கம் பார்க்க)

## எரிபொருள் விலை மீண்டும் உயரும்?

கொழும்பு, மார்ச் 08

சர்வதேச சந்தையில் மசகு எண்ணெயின் விலை 106 டொலராக அதிகரித்துள்ளதைத் தொடர்ந்து இலங்கையில் மீண்டும் எண்ணெய் விலையை அதிகரிப்பது குறித்து இம்மாத இறுதியில் முடிவெடுக்கப்படலாம் என இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் தலைவர் அஸந்தா டி மெல் குறிப்பிட்டுள்ளார்.

எண்ணெய் விலை உலக சந்தையில் குறைகின்றதா எனத் தான் பொறுத்திருந்து பார்க்க விரும்புகிறார் எனவும் -

மாத இறுதியிலேயே எண்ணெய்யின் சில்லறை விலையை அதிகரிப்பது குறித்து முடிவெடுக்கலாம் எனவும் - அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

மின்சாரக் கட்டணம் உட்பட சகல அத்தியாவசியப் பொருள்கள் மற்றும் சேவைகளின் விலைகள் தற்சமயம் அதிகரிக்கின்றமையால், எண்ணெய்யின் சில்லறை விலையை அதிகரிக்கத் தாம் விரும்பவில்லையென அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

''எங்களால் சமாளிக்க முடியுமா எனப் பார்க்கின்றோம். எண்ணெய் சுத்திகரிப்பு நிலையங்களும் மீண்டும் உற்பத்தியை அதிகரித்துள்ளமையால் நுகர்வோர் மீது சுமையைச் செலுத்தாமல், அடுத்த சில வாரங்களுக்கு எண்ணெய் விலை குறைகின்றதா எனப் பார்க்கப்போகின்றோம்'' - என்றும் அஸந்தா டி மெல் தெரிவித்துள்ளார்.

(சி)

## மகேஸ்வரன் கொலை தொடர்பாக 2 பேர் தொடர்ந்து தடுத்து வைப்பு

### இரு பெண்கள் உட்பட மூவர் விடுதலை

கொழும்பு, மார்ச் 08

தி.மகேஸ்வரன் எம்.பி. படுகொலை தொடர்பாகக் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருந்த ஐவரில் இரு பெண்கள் உட்பட மூவர் விடுதலைசெய்யப்பட்டனர், இருவர் தொடர்ந்து விளக்கமறியலில் வைக்கப்பட்டனர்.

மகேஸ்வரன் கொலை தொடர்பான விவகாரம் நேற்று கொழும்பு மேலதிக நீதிவான் ரவீந்திர பிரேமரத்ன முன்னிலையில் எடுத்துக்கொள்ளப்பட்ட போதே கொழும்பு குற்றப்புலனாய்வுப் பொலிஸாரின் கோரிக்கைப்படி மூவரை விடுதலை செய்யும் உத்தரவையும், மற்றைய இருவரையும் விளக்கமறியலில் தடுத்து வைக்கும் கட்டளையையும் நீதிவான் விடுத்தார்.

சந்தனம் பிரியதர்ஷினி, பெருமாள் புதிபன் விக்ரோறியா, நெப்பினா ஆகியோரே விடுதலை செய்யப்பட்டனர்.

ஜோன்சன் கொலின் வலன்டைன், பிரான்ஸிஸ் சுதர்ஸன் ஆகியோரே தொடர்ந்து காவலில் வைக்கப்பட்டனர்.

(12ஆம் பக்கம் பார்க்க)

## சிவநேசன் கொலையை கண்டிக்கிறதாம் அரசு

கொழும்பு, மார்ச்.08

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் குண்டுத் தாக்குதல் மூலம் படுகொலை செய்யப்பட்ட செயல் கண்டிக்கத்தக்கது என அரசு தெரிவித்திருக்கின்றது.

அமைச்சரவைப் பேச்சாளர் அனுர பிரியதர்ஷன யாப்பா இத்தகவலை நேற்றுத் தெரிவித்தார்.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர்கள் சந்திப்பில் கலந்து கொண்டு தகவல் வெளியிடுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்தத் தாக்குதல் சம்பவம் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியில் இடம்பெற்றுள்ளது. அதனால் உண்மையில் என்ன நடந்தது என்பதை அறியவோ அல்லது முழுமையான விசாரணையை நடத்தவோ முடியாமல் உள்ளது.

எனினும், அவர் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் குறித்து இயன்ற வகையில் விசாரணை நடத்தப்படும்.

இந்தத் தாக்குதலை யார் மேற்கொண்டிருந்தாலும் அது கண்டிக்கத்தக்கது. - என்றார் அவர்.

(உ)

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## தென்மராட்சி அதிபர்கள் கூட்டம்

யாழ்ப்பாணம், மார்ச் 8

தென்மராட்சி கல்விவலயப் பாடசாலைகளின் அதிபர்களுக் கான கூட்டம் எதிர்வரும் புதன்கிழமை நண்பகல் 12 மணிக்கு சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் நடைபெறுமென வலயக்கல்விப் பணிப்பாளர் கு.பிரேமகாந்தன் அறிவித்துள்ளார். (1-207)

## 4ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர்

**சிற்றம்பலம் சிவபாலன்**

(Rt.NURSING OFFICER)



தோற்றம்: 01.04.1943

மறைவு: 20.02.2004

திதி:பிரதமை

வாழ்விற்கோர் விடியலாய் நல்ல வழிகாட்டியாய்
வாழ்வாங்கு வாழ வழிகாட்டிய உத்தமரே!
விண்ணுலக வாழ்வுக்கு விரைந்து சென்றதேனோ!
ஆண்டு நான்கு சென்றாலும் ஆறாது எம் துயரம்!

64A, புங்கன்குளம் வீதி,
யாழ்ப்பாணம். (71811) குடும்பத்தினர்.

## ஈரவிழிகளுடன் முதலாம் ஆண்டு நினைவலைகள்

| தோற்றம் | | மறைவு |
|---|---|---|
| 14 |  | 19 |
| 11 | | 02 |
| 1941 | | 2007 |

**அமரர் சிவசம்பு மனோகரசீலன்**

(முன்னாள் வர்த்தகசங்கத் தலைவர், மானிப்பாய், சுரேக்கா ரெக்ஸ் உரிமையாளர்)

திதி: 09.03.2008 (ஞாயிற்றுக்கிழமை)

எங்கள் நினைவுகளில் என்றும் நின்று
நிழலோடு நிஜமாக நிற்கும் எங்கள்
அன்புத் தெய்வமே ஓராண்டென்ன
பல ஆண்டுகள் சென்றாலும் உன் நினைவுடனேயே
என்றும் வாழுகின்றோம்.
அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.
*ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!*

*குறிப்பு: மதியபோசனத்தில் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.*

*நாவலடி லேன்,*
*மானிப்பாய்.*

தகவல்:
மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள். (71807)


## யாழ்.நகரில்!

அங்கீகாரம் பெற்ற

hp விற்பனை முகவர்...

hp Branded Computers



HP g32151 Home PC
Pentium D 3.0 GHz
512 MB DDR-2
80.0 GB HDD
Combo Drive
9 in 1 Card Reader
HP 17" CRT Monitor

Rs.58,500/= மட்டுமே!

- மலிவான விலை,சர்வதேச தரம்.
- முழுமையான உத்தரவாதம் & தரமான விற்பனைக்கு பிந்திய சேவை.

**SDS Computer Services**

No. 356, K.K.S Road, Jaffna.

Tel : 021- 4590686 / Hotline : 0777- 874705

விற்பனைக்கான எமது மேலதிக பொருட்கள்:-

| | | | |
|---|---|---|---|
| Printers | Laptop | Accessories | CD/DVD |
| Scanners | woofers | Copiers | Players |
| PC Tables | UPS | Fax Machine | ets.... |

எங்களின் நோக்கம் ~ உங்களின் தொழில்நுட்ப முன்னேற்றம்



## விற்பனைக்கு

Shell Gas வெற்றுச்சிலிண்டர்கள், SLT Cable Telephone line, Oven. MD - 90 Motor cycle

தொடர்பு: S.பிரேம்,
நக்கா றோட் யாழ்ப்பாணம். T.P- 9201 (71814)


மகேசு பார்த்தீபனின்
கரையாத கற்பனைகள்

## சவர்க்கார சிற்பக்கண்காட்சி

இடம்:-
யாழ்ப்பாணக் கல்லூரி, பட்டதாரிப்பிரிவு,
யாழ்ப்பாணம்.

காலம்:-
08.03.2008
ஆறாம் திகதி முதல் நடைபெறுகிறது

நேரம்:-
9.00 - 4.30 மணிவரை

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

எமது பாடசாலையின் காவலாளியான
இ.சதானந்தராஜாவின்
அன்புத் தந்தை

**தில்லையர் இராசையா**

அவர்களின்31ஆம்நினைவுநாளானஇன்று அவரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திப்பதுடன் அன்னாரது குடும்பத்தினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித் துக் கொள்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்,
யா/கைதடி விக்னேஸ்வர வித்.,கைதடி.

## மரண அறிவித்தல்

### சாம்பசிவம் சாம்புணதீஸ்வரி

மண்கும்பான் கிழக்கு, 4ஆம் வட்டா ரத்தை பிறப்பிடமாகவும், 17/27, பண் டாரக்குள வீதி, நல்லூரை வதிவிடமா கவும் கொண்ட சாம்பசிவம் சாம்புண தீஸ்வரி நேற்று (07.03.2008) வெள் ளிக்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற ஏரம்பு- செல் லம்மா தம்பதியினரின் மகளாவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் பற் றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உற வினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

*17/27, பண்டாரக் குளம் வீதி,*
*நல்லூர்.*

தகவல்:
குடும்பத்தினர்.

## கூட்டம்

யாழ்ப்பாணம்,மார்ச்8

தென்மராட்சி அரச ஓய்வூதியம் பெறுவோர் சங்கத் தின் வருடாந்தபொதுச் சபைக் கூட்டம் எதிர் வரும் 16 ஆம் திகதி காலை 9.30மணிக்கு தென்மராட்சி பிர தேச செயலக கேட் போர்கூடத்தில்நடை பெறுமென சங்கச் செயலாளர்ஸ்.காசித் தம்பி அறிவித்துள் ளார். (1-207)

## விபத்தில் சாரதி காயம்

யாழ்ப்பாணம்,மார்ச்8

ஏ-9 வீதியில் வேகமாக வந்த இரு முச்சக்கர வண்டி கள் நேருக் நேர் மோதியதில் சாரதி ஒருவர் காயமடைந் தார்.

இச் சம்பவம் நேற்று முன்தினம் மீசாலையில் இடம் பெற்றது.

இச்சம்பவத்தில் காயமடைந்த கொடி காமத்தைச் சேர்ந்த த.விஜிதாகரன் (வயது - 20) ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டார்.

நல்லூர், ஸ்ரீமத் நல்லைநாயகி சமேத ஸ்ரீ நல்லைநாத சுவாமி கோயில் (ஸ்ரீ சட்டநாதர் ஆலயம்)

## ஏகாதச உருத்திர ஹோமம்

நாளை (09.03.2008) ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணி முதல் நண்பகல் 12 மணிவரை இவ்வாலயத்தில் மிகச்சிறப்பாக தா.வாசுதேவக் குருக்கள் தலைமை யில் இடம்பெறும். அடியார் கள் வந்து எம்பெருமான் அருள்பெறுக.

(A) உபயகாரர்கள்.

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும் அந்தியேட்டி அழைப்பும்

| தோற்றம் | | மறைவு |
|---|---|---|
| 25 |  | 08 |
| 05 | | 02 |
| 1962 | | 2008 |

அமரர்

**நல்லதம்பி கந்தசாமி**

*08.02.2008* அன்று காலமான எமது குடும்பத்தலைவரின் மறைவுச் செய்தி கேட்டு உடன் வந்து உதவியோருக்கும் எமது துயரில் பங்கு கொண்டவர்களுக்கும் எமது மனமார்ந் நன்றி களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

நாளை (*09.03.2008*) ஞாயிற்றுக்கிழமை எமது இல் லத்தில் நடைபெறும் அன்னாரின் அத்மசாந்திப் பிரார்த்தனை யிலும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து அன்னாரின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்குமாறு உற்றார், உற வினர், நண்பர்கள் அனைவரையும் அழைக்கின்றோம்.

நூறுவீட்டுத் திட்டம்,
சாவற்கட்டு,
ஆனைக்கோட்டை. (71803)

அம்மா, அப்பா, மனைவி, பிள்ளைகள், தம்பிமார், தங்கை, உறவினர்கள்.

## மரண அறிவித்தல்கள்

### *கந்தையா நடராசா*

அளவெட்டியைப் பிறப்பிடமாகவும் காரைநகர் மேற்கு, சல் லையை வசிப்பிடமாகவும் வட்டு.கிழக்கு, சங்கரத்தையை தற் போதைய வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா நடராசா நேற்று (07.03.2008) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சந்தனம் செல்லம்மாவின் அன்புக் கணவரும், குமாரசாமி (கனடா), அமரர் பரமேஸ்வரி, சிவகுஞ்சரி, அன்னலக்சுமி, கிருஷ்ணராஜா (கனடா), பவானி ஆகியோரின் அன்புத்தந்தையும், சாந்தவதனா(கனடா), சிவலிங்கம், ஜெயராசா, ஜெகநாதன் (கண்ணன்-லக்சுமி அழகுமாடம், மாவடி), உதயகுமார் ஆகியோரின் மாமனாரும், கிஷாந் (கனடா), கயெந் (கனடா) , நிலக் ஷன் (கனடா), புவனேஸ்வரி, ரவிந்திரன், பரணீதரன், சிவநேசன், கங்காரன், சிவகுமார், சதீஸ்வரன், வினோதினி, டிஜீவன், காயத் திரி (கனடா) , கிருஷன் (கனடா),ரிஷிகேசன், தாட்சாயினி ஆகியோ ரின் அன்புப் பேரனும் ஆவார். அன்னாரின் இறுதிக்கிரியை பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

***க்ள்ளி வீதி, சங்கரத்தை,***
***வட்டுக்கோட்டை.*** (71818)

தகவல்:
குடும்பத்தினர்.

### கந்தையா தெட்சணாமூர்த்தி

(ஓய்வூதியர்,தபால் திணைக்களம்-முன்னாள் தலைவர், தொல்புரம்-சுழிபுரம் ஐக்கிய பரஸ்பர சகாய சங்கம் - பொருளாளர், தொல்புரம் மேற்கு சிக்கன கடன்வழங்கு கூட்டுறவுச்சங்கம்)



கோலாலம்பூர், மலேசியாவைப் பிறப்பிட மாகக் கொண்டவரும் தொல்புரம் மேற்கை வசிப் பிடமாகக் கொண்டவருமாகிய கந்தையா தெட்ணாமூர்த்தி 05.03.2008 புதன்கிழமை காலமானார்.

அன்னார் அமரர்களாகிய வேலாயுதர் அல்லது பண்டாரம் கந்தையா - தையல்முத்து தம்பதிக ளின் மூத்த மகனும், அமரர்களாகிய கதிரேசு வேலுப் பிள்ளை- முத்தாச்சி தம்பதிகளின் மூத்த மருமகனும், காலஞ்சென்ற சரோஜினிதேவியின் அன்புக் கணவரும் ஸ்ரீராம் அவர்களின் (பொறுப் பதிகாரி,லங்கா சிமெந்து Ltd. இணுவில், யாழ்ப்பாணம்) பாசமிகு தந்தையும் பத்மாவின் அன்பு மாமனாரும், காலஞ்சென்றவர்களா கிய பாலசுப்பிரமணியம், தனபாக்கியம், சண்முகநாதன் மற்றும் குண பாக்கியம், ரத்திணசபாபதி(முன்னாள் லிகிதர், MPCS, சங்கானை- பிரதி முகாமையாளர், கொட்டாஞ்சேனை முத்துமாரியம்மன் தேவஸ் தானம்), கணேசன் (கனடா), வரதராஜா (முன்னாள் ஊழியர், MP CS,சங்கானை), லட்சுமிகாந்தன் (சுவிஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்றவர்களான மகாலட்சுமி, பரமானந்தர், தனபாலன், செல்வராணி மற்றும் தவமணிதேவி, சாரதா, இராஜேஸ் வரி ஆகியோரின் அன்பு மைத்துனரும், காலஞ்சென்ற அம்பலவா ணர் சிதம்பரப்பிள்ளை- சரஸ்வதி தம்பதியரின் சம்பந்தியும், ராகவ ராம் (Quantity Surveyor, Baharin), Dr.சிவகுமார் ராகினி (ஜேர் மனி), ராஜாராம்(மாணவன், தொழில்நுட்பக் கல்லூரி, கொக்கு வில், வட்டுக்கோட்டை) ஆகியோ ரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (09.03.2008) ஞாயிற் றுக்கிழமை காலை 8 மணியளில் நடைபெற்று பூதவுடல் திருவடி நிலை இந்து மயானத்தில் தகனஞ் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர் கள் அனை வரும் ஏற்றுக் கொள்ளவும்.

***'சரோஜினி வாசா',***
***கல்லூரி முன் ஒழுங்கை,***
***தொல்புரம் மேற்கு, சுழிபுரம்.*** (B)

*தகவல்:*
தெ.ஸ்ரீராம்(மகன்)

# வலைப்பந்தாட்ட வளர்ச்சிக்குத் தேவையான சர்வதேச தரம்மிக்க பயிற்சி நிலையம், மைதானம் போன்ற வசதிகள் யாழ்ப்பாணத்தில் இல்லை



## தேசிய மட்டத்தில் பிரகாசிப்பதற்கு வசதிகள் மிக அவசியம் என்கிறார் திருமதி ரூபசிங்கம்

யாழ்.மாவட்டத்தில் ஒரு சிறந்த வலைப் பந்தாட்ட அணியை உருவாக்க வேண்டுமெனில் பாடசாலைகளில் சிறுவயது முதல் பயிற்சிகள் வழங்கப்படவேண்டும். இதனால் எதிர்காலத்தில் வலைப்பந்தாட்டத்திலும் குறிப்பிடத்தக்க வளர்ச்சியை எட்டமுடியும். இதற்காகப் பாடசாலைகளில் 13 வயதுக்குட்பட்டவர்களுக்கான வலைப் ட்ந்தாட்ட அணிகளை உருவாக்கி அவர்களுக்கான போட்டிகளையும் நடத்த வேண்டும்.

யாழ்.மாவட்டத்தின் முன்னாள் பதில் விளையாட்டு அதிகாரியும் மாவட்ட வலைபப் பந்தாட்டப் பயிற்றுவிப்பாளரும் வலைப்பந்தாட்டச் சங்கம், வலைப்பந்தாட்ட மத்தியஸ்தர் சங்கம் ஆகியவற்றின் தலைவருமான திருமதி ஜே.எவ்.ஏ.ரூபசிங்கம் இவ்வாறு தெரிவித்தார்.

யாழ்.மாவட்டத்தில் வலைப்பந்தாட்டத்தின் வளர்ச்சி பற்றி அவர் அளித்த செவ்வியில் தெரிவித்ததாவது:-

யாழ்.திருக்குடும்பக் கன்னியர் மடம் ஆங்கிலப் பாடசாலையில் நான் கல்வி பயின்றேன். அப்போது நான் வலைப்பந்தாட்டப் பயிற்சிக்கு அழைக்கப்பட்டேன். 1968ஆம் ஆண்டு யூகனஸ் என்று கூறப்படும் 13 வயதுப் பிரிவு அணியில் விளையாடத் தொடங்கினேன். அதனைத் தொடர்ந்து கனிஷ்ட அணி, சிரேஷ்ட அணியென்று 15,17,19 வயதுப் பிரிவுகளுக்கான வலைப்பந்தாட்ட அணியில் இடம்பெற்றேன்.

1973ஆம் ஆண்டு எமது 19 வயதுப் பிரிவு அணியானது மாவட்ட மட்டத்தில் வெற்றிபெற்றதைத் தொடர்ந்து தேசிய மட்டத்தில் கல்வி அமைச்சினால் நடத்தப்பட்ட போட்டியிலும் நாம் வெற்றி பெற்றோம்.

பாடசாலையை விட்டு நீங்கிய பின்னர் மாவட்ட அணியில் இடம்பிடித்துக் கொண்டேன். அப்போது தேசிய மட்டப் போட்டியில் யாழ். மாவட்ட அணி கலந்துகொண்டது. அதில் இடம்பெற்ற எமது அணி இரண்டாம் இடத்தைப் பெற்றுக்கொண்டது.

1977ஆம் ஆண்டு பெண்களுக்கான விளையாட்டு அலுவலராக நியமனம் பெற்றேன். 1980ஆம் ஆண்டு அரசின் கொள்கைக்கு ஏற்ப விளையாட்டு அலுவலராக நியமனம் மாற்றம் செய்யப்பட்டது.

இதனைத் தொடர்ந்து கோப்பாய், யாழ்ப்பாணம், நல்லூர் பிரதேச செயலர் பிரிவுகளில் விளையாட்டு அலுவலராகக் கடமையாற்றியுள்ளேன். தொடர்ந்து ஆறு வருடங்களுக்கு மேலாக யாழ்.மாவட்டத்தின் பதில் விளையாட்டு அலுவலராகவும் பணி புரிந்தேன். தற்போது யாழ். மாவட்ட வலைப்பந்தாட்டப் பயிற்றுவிப்பாளராக உள்ளேன்

1981ஆம் ஆண்டு அகில இலங்கை வலைப்பந்தாட்ட மத்தியஸ்தர் சங்கத்தினால் வெண்கலப் பதக்கமும் 1996ஆம் ஆண்டு வெள்ளிப் பதக்கமும் பின்னர் தங்கப் பதக்கமும் வழங்கப்பட்டன.

யாழ். மாவட்டத்தின் பதில் விளையாட்டு அலுவலராக இருந்த காலத்தில் 1997ஆம் ஆண்டில் இருந்து வலைப்பந்தாட்டப் பயிற்றுவிப்பாளராக இருந்தேன். இந்தக் காலத்தில் யாழ்.மாவட்ட வலைப் பந்தாட்ட அணி தொடர்ச்சியாக 8 ஆண்டுகள் மாகாண மட்டச் சம்பியனானது.

**குடாநாட்டு விளையாட்டு அரங்குகளில்**

2001ஆம் ஆண்டில் நான் பயிற்றுவித்த ஜெயந்தி சோமசேகரம் தேசிய அணியில் இடம்பெற்றார் இவர் பின்னர் உலக வலைப் பந்தாட்டப் போட்டியில் கலந்துகொள்ளச் சென்ற இலங்கை தேசிய அணியின் தலைவராகவும் இருந்தார்.

2004ஆம் ஆண்டு நித்தியா இராஜ ரட்ணமும் தேசிய அணியில் இடம்பெற்று போட்டிகளில் கலந்துகொண்டார். மேலும் அகில இலங்கை வலைபந்தாட்டப் போட்டிகளில் கலந்துகொண்ட யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த வீராங்கனைகளான அஜந்தா சிவலிங்கம், சங்கீதா திருச்செல்வம், பிருந்தா சோமசேகரம், ஸ்ரீ காயத்திரி திருச்செல்வம் ஆகியோர் என்னிடம் பயிற்சி பெற்றவர்கள்.

இவர்கள் தேசிய மட்டப் போட்டிகளில் கலந்துகொண்டதுடன் தேசிய மட்டத்தில் வலைபந்தாட்டத்தில் சிறந்த வீராங்கனைகளுக்கான விருதுகளையும் வென்றுள்ளார்கள்.

2000ஆம் ஆண்டு யாழ்.மாவட்டத்தில் இருந்து அழைத்துச் செல்லப்பட்ட கலப்பு வலைப்பந்தாட்ட அணியினர் அகில இலங்கை வலைப்பந்தாட்ட அணி தேசிய மட்டத்தில் நடத்திய போட்டியில் சம்பியனாகி தங்கப்பதக்கதை வென்றது.

குடாநாட்டில் இப்போது சிறந்த வீராங்கனைகள் பாடசாலை மட்டத்தில் காணப்படுகின்றார்கள். இவர்கள் சரியான முறையில் இனங்காணப்படவேண்டும். விளையாட்டு அமைச்சும் கல்வித் திணைக்களமும் இணைந்து நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும்.

யாழ்ப்பாணத்தில் தற்போது வலைப் பந்தாட்ட மத்தியஸ்தர் சங்கத்தை அமைத்து போட்டிகளை நடத்தும் நிலைமை கோட்ட மற்றும் வலய மட்டங்களில் காணப்படுகின்றது. இதன் மூலம் நாம் செல்லும் போட்டிகளில் சிறந்த வீரர்களை இனங்கண்டு மாவட்ட மட்டத்தில் அழைத்துப் பயிற்சிகளை வழங்கக் கூடியதாக உள்ளது. வீராங்கனைகள் பாடசாலை மட்டத்தில் விளையாடும் போதே சில அடிப்படைப் பயிற்சிகளைப் பெற்றுக்கொள்ள வேண்டியது மிகவும் அவசியமாகும்.

பாடசாலையை விட்டு விலகிய பின்னர் கழகங்களுடன் இணைந்து விளையாடும் போது கடுமையான பயிற்சிகளை மேற்கொள்வதுடன் விளையாட்டு நுணுக்கங்களையும் கற்றுக்கொள்ளவேண்டும்.

வலைப்பந்தாட்ட வளர்ச்சியை மாவட்டம் தழுவிய ரீதியில் முன்னெடுத்துச் செல்வதில் பலத்த நெருக்கடிகள், பிரச்சினைகள் ஆகியவற்றுக்கு முகம்கொடுக்க வேண்டியுள்ளது.

வலைபந்தாட்டத்திற்கென பயிற்சி நிலையம், சிறந்த மைதானம் என்பன இங்கு இல்லை. உள்ளக வலைபந்தாட்ட விளையாட்டு மைதானம் இல்லை. வலைப் ப்ந்தாட்டப் பயிற்சிக்கான வசதிகளும் போதியளவு இல்லை இவற்றுக்கு மத்தியிலும் எமது வீரர்கள் தமது திறமைகளைத் தொடர்ந்து வெளிப் படுத்திவருகின்றனர்.

வீராங்கனைகள் பயிற்சிகளுக்கு வந்து செல்லக்கூடிய நிலைமையும் இப்போது இல்லை. அவர்களின் குடும்ப பொருளாதார நிலைமைகளும் பின்தங்கியுள்ளமையால் விளையாட்டில் போதிய கவனம் செலுத்தமுடியாத நிலையில் அவர்கள் உள்ளனர்.

குடாநாட்டில் உள்ள வர்த்தக நிறுவனங்கள், வங்கிகள் மற்றும் தனியார் அரச நிறுவனங்கள் அனுசரணையாளர்களாகவும் வசதி குறைந்த வீராங்கனைகளுக்கு உதவிகளை வழங்குபவர்களாகவும் செயற்பட்டால் வலைப்பந்தாட்டத்தை மேலும் வளர்ச்சியடையச் செய்யமுடியும்.

**விண்ணன்**

இதேவேளை -

தொடர்ச்சியான பல போட்டிகள் பாடசாலை மட்டத்தில் நடத்தப்படவேண்டும். பாடசாலைகளிடையே இடம்பெறும் போட்டிகளில் ஒரு சில முன்னணிப் பாடசாலைகள் மட்டும் கலந்துகொள்ளும் நிலை மாறி எல்லாப் பாடசாலைகளும் கலந்து கொள்ளவேண்டும்.

யாழ்.மாவட்ட வலைப்பந்தாட்ட சங்கம் வெகுவிரைவில் பாடசாலை மட்டத்தில் 13 வயதுப் பிரிவினருக்கான வலைப்பந்தாட்டப் போட்டியொன்றை நடத்துவதற்கான முயற்சிகளை மேற்கொண்டுள்ளது. இந்தப் போட்டியில் அனைத்துப் பாடசாலைகளும் கலந்துகொண்டு முழுமையான ஒத்துழைப்பை வழங்கவேண்டும் - என்றார்.

செய்திகள் 11 ஆம் பக்கத்தில்

## வீரர்களின் போர் துடுப்பாட்டத்தின் போது....



ஸ்கந்தா வீரர் பந்து வீச்சின் போது....



மகாஜனவின் விக்கெட் வீழ்ந்த போது குதூகலிக்கும் ஸ்கந்தா ஆதரவாளர்கள்....

## பொன் அணிகளின் 91 ஆவது துடுப்பாட்டம்



இரு கல்லூரிகளின் அதிபர்களும் வீரர்களும் அணிவகுத்து மரியாதை செலுத்தும் போது...



இரு கல்லூரிகளின் அதிபர்கள் கொடியேற்றும் போது....

# அறிவித்தல்

**அச்சுவேலி பத்தமேனி விநாயகர் சனசமூக நிலைய அதிர்ஷ்டலாபச் சீட்டு பரிசுபெறுவோர் விவரம்**

*முதலாம் பரிசு - 503 மயூரன், ஏழாலை மத்தி.*
*2ஆம் பரிசு - 618 இ.பரமேஸ்வரன், பஸ்நிலையம், அச்சுவேலி.*
*2ஆம் பரிசு - 987 சொருபன், தோப்பு அச்சுவேலி*
ஆறுதல் பரிசு - 441 - பொ.வன்னியசிங்கம், பிரதேச செயலகம், கோப்பாய். 1122 - ரவிகிருஷ்ணா, சிறுப்பிட்டி. 608 - து.செல்வக்குமார், அச்சுவேலி வடக்கு. 689 - துஸ்யந்தன், வைரவர் கோயிலடி, பத்தமேனி. 476 - நாகலிங்கம், சந்நிதி வீதி, அச்சுவேலி.
சனசமூக நிலயத்தில் பரிசுகளை உரியவர்கள் பெற்றுக்கொள்ளலாம்.

விநாயர் சனசமூக நிலையம்
பத்தமேனி அச்சுவேலி.
செயலாளர்.



அம்பிகை துணை

## நல்லூர் பாணன்குளம் நாச்சி அம்மன் ஆலய வருடாந்த மகோற்சவ விஞ்ஞாபனம்

**சர்வசித்து வருடம் - 2008**

09.03.2008 ஞாயிறு முற்பகல் 10 மணி
- கொடியேற்றம்

தினசரி உற்சவம் முற்பகல் 9.30 மணி
- வசந்தமண்டபப் பூசை
மாலை 5 மணி
- வசந்தமண்டபப் பூசை

21.03.2008 வெள்ளி மாலை 5 மணி - சப்பரம்
22.03.2008 சனி முற்பகல் 8 மணி
- தேரில் ஆரோகணித்தல்
23.03.2008 ஞாயிறு காலை 7 மணி
-வசந்தமண்டபப் பூசை-தீர்த்தோற்சவம்
24.03.2008 திங்கள் மாலை 4 மணி - பூங்காவனம்

மகோற்சவ காலத்தில் அம்பிகையை வணங்கி அருள் பெறுவீர்களாக
(71792) **ஆலய பரிபாலன சபை.**

# ஓராண்டு நினைவஞ்சலி

பிறப்பு
17 ★ 07 ★ 1935



இறப்பு
09 ★ 03 ★ 2007

## அமரர்
## அந்தோனிப்பிள்ளைஅலெக்சீஸ்

(ஓய்வுபெற்ற கிராம உத்தியோகத்தர்,
முன்னாள் பணிப்பாளர் - யாழ்.ப.நோ.கூ.சங்கம்)

**வாழ்வும் வழியும் ஒளியுமானவரே
என்றும் எம் வழிகாட்டியானவரே
ஓராண்டல்ல என்றும் உம்
நினைவில் வாழ்ந்து - உங்கள்
ஆன்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்**

*18,புதுமை மாதா கோயில்,
கிழக்கு வீதி,
யாழ்ப்பாணம்.* (71753)
மனைவி,
குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்

## *திருமதி புஷ்பதேவி விஜயரத்தினம்*



சங்குவேலியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகக் கொண்ட திருமதி புஷ்பதேவி விஜயரத்தினம். நேற்று (07.03.2008) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - இராசம்மா தம்பதியரின் அன்புமகளும் மற்றும் விஜயரத்தினத்தின் அன்பு மனைவியும் ,விஜயகுமார்(ஜேர்மனி), விஜயகுமாரி (பட்டு), விஜயசிறி ஆகியோரின் அன்புத்தாயும், கணேசலிங்கம்(பாதுகாப்புஉத்தியோகத்தர், யாழ்.நூலகம்),நவரத்தினம் (நவம்), கமலவேணி(ஜேர்மனி) ஆகியோரின் அன்புமாமியும் காலஞ்சென்ற மாசிலாமணி, மற்றும் தங்கரத்தினம், அரியமலர், துரைசிங்கம், இரத்தினேஸ்வரன், சறோஜினிதேவி, தவராசா, செல்வராசா, ஆகியோரின்அன்புச்சகோதரியும் சர்மிலன், ஜஸ்மினி, அபிலக்சியா,சஞ்சய், சகான ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(08.03.2008) சனிக்கிழமை ந.ப 12.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சங்கப்புலவு இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*..ச் வீதி,
சங்குவேலி வடக்கு,
மானிப்பாய்.*
T.P. 077-9484682 (71801)
தகவல்:
செ.விஜயரத்தினம்
*(கணவர்)*

# நிகழ்வுகள்

சுழிபுரம்,மார்ச் 8

திருக்கோவையார் செய்யுள் தொகுப் பின் வெளியீட்டுவிழா நாளை ஞாயிற்றுக் கிழமை காலை வழக்கம்பரை முத்துமாரி அம்பாள் ஆலயத்தில் நடைபெறவுள்ளது.

சைவ அன்பர்களின் உதவியோடு மலிவுப்பதிப்பாக சுழிபுரம் பஜனை சபையாரால் இந்நூல் வெளியிடப்படவுள்ளது.

இந்நூலைப் பெறவிரும்புவோர் செயலாளர், பஜனைச்சபை, சுழிபுரம் என்னும் முகவரியுடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (202-28)

* * *

யாழ்.சமூக அபிவிருத்தி மன்றம் நடத்தும் மகளிர்தின விழா இன்று சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு மன்ற அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

மன்றத்தலைவி திருமதி.ஜே.யோசப் தலைமையில் நடைபெறவுள்ள இந் நிகழ்வில் பல்வேறு கலை நிகழ்வுகளும் இடம் பெறும். (202)

* * *

கரவெட்டி,மார்ச் 8

கொற்றாவத்தை அ.மி.த.பாடசாலை பழைய மாணவர் குழுவினர் நாளை ஞாயிற்றுக்கிழமை பி.ப 1.30 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் கலைஞர் கௌரவிப்பு விழாவை நடத்தவுள்ளனர்.

சிறப்பு விருந்தினராக பருத்தித்துறை பிரதேச செயலர் இரா.வரதீஸ்வரன் கலந்து கொள்கிறார். ஆசியுரையினை வல்வை முத்துமாரி அம்மன் ஆலய பிரதமகுரு சிவஸ்ரீ சோமஸ்கந்த தண்டபாணிகதேசிகர் வழங்குவார். கௌரவிக்கப்படவுள்ள கலைஞர்களின் விவரம் வருமாறு: கலாபூசனம் அமரர் கந்தையா பாலசிங்கம் பொலிகை கவிஞர் அமரர் சபாபதி திருப்பதி புலவர் கதிர் சீனித்தம்பி கலைவேந்தன் கற்கண்டு சபாரத்தினம் பண்ணிசை மணி முருகேசு வேதாரணியம். (202-70)

# கண்ணீர் அஞ்சலி



எமது எயிட்லைன்ஸ் ஆய்வு கூட தொழில் நுட்பவியலாளரான

## சுப்பிரமணியம் நடராசா

அவர்கள் (05.03.2008) அன்று இறைபதம் அடைந்தமையையிட்டுப் பெருந்துயரடைவதோடு எமது ஆய்வு கூடத்தின் சார்பாக அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் அவரின் குடும்பத்தினருக்கும் எமது உளமார்ந்த அனுதாபங்களை தெரிவிப்ப தோடு எமது கண்ணீர் அஞ்சலிகளையும் அவர் மலர்ப் பாதங்களில் காணிக்கையாக்குகின்றோம்.

(71800) எயிட்லைன்ஸ் ஆய்வுகூடத்தினர்.

# மரண அறிவித்தல்

## *சுப்பர் சின்னப்பு (ஓய்வுபெற்ற ஆசிரியர்)*



கல்வயல், சாவகச்சேரியைப் பிறப்பிடமாகக் கொண்ட சுப்பர் சின்னப்பு நேற்று (07.03.2008) வெள்ளிக்கிழமை சிவபதம் அடைந்தார்.

அன்னார் விசாலாட்சியின் அன்புக் கணவரும் நாகம்மாவின் சகோதரரும் குகநாதன் (யா/ போதனா வைத்தியசாலை), யோகவதனி, சிவகணநாதன், (பிரதேச செயலகம் தென்மராட்சி) ஆகியோரின் பாசமிகு தந்தையும், லாகினி(மாவட்டசெயலகம்), சச்சிதானந்தம் (ஓம்சக்தி), சாந்தினி(யாழ்.கல்வி வலயம்)ஆகியோரின் பாசமிகு மாமனாரும், நிரோஜா, விதூஷன், அரிசுதன், சுரேஸ், ஐங்கரன், கம்ஷா, பிரணவன் ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று(07.03.2008) வெள்ளிக்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் வேம்பிராய் இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகிறோம்.

*முதலாம் கட்டை,
கல்வயல், சாவகச்சேரி.* (71809)
தகவல்:
மனைவி,பிள்ளைகள்

# தென்மராட்சி கிழக்கு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வரைவுள்ளது) - கொடிகாமம்

## கிளைக்குழு உறுப்பினர் தெரிவு தொடர்பான

# அறிவித்தல்

வடக்கு, கிழக்கு மாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரும் பதிவாளரும் அவர்களினால் ஆக்கப்பட்டு 1998.05.19ஆம் திகதிய 1028/6 இலக்கம் கொண்ட அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்படுவதுமான வடக்கு, கிழக்கு மாகாண நிர்வாக எல்லைக்குட்பட்ட பகுதியில் இயங்கிவரும் வரையறுக்கப்பட்ட பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் கிளைக்குழுக்களைத் தெரிவு செய்வதற்காக ஆக்கப்பட்டுள்ள விதிகளுக்கு அமைய யாழ். மாவட்டக் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளராகிய நான் 1997.02.17 ஆம் திகதிய 963/1, இலக்கம் கொண்ட அதிவிசேட வர்த்தமானி மூலம் என்மீது பாரிக்கப்பட்ட அதிகாரங்களின் படி மேற்படி சங்கத்தின் துணைவிதி 23 இற்கமைய மேற்படி சங்கத்தின் சகல கிளைகளுக்குமான கிளைக்குழுத் தெரிவுக்கான கிளைப் பொதுச் சபைக் கூட்டங்கள் பின்வரும் கால அட்டவணையின்படி நடைபெறுவதற்காக இக்கூட்டங்களை அழைப்பதற்கும் அவற்றின் தவிசாளராகக் கடமையாற்றுவதற்கும் கீழ்வரும் அலுவலர்களைப் பெயர் குறித்து நியமித்துள்ளேன்.

- இதற்கமைய இக்கூட்டங்களில் சமுகமளித்து வாக்களிக்க உரிமையுள்ள உறுப்பினர்களுக்குத் தனித்தனி அறிவித்தல்கள் சம்பந்தப்பட்ட அலுவலர்களினால் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.
- கிளைப்பொதுச்சபைக் கூட்டத்திற்கான நிறைவெண் கூட்டத்திற்குச் சமுகமளித்து வாக்களிக்கத் தகுதியுள்ள உறுப்பினர்களில் நான்கிலொரு (1/4) பங்கினர் அல்லது 25 பேர் அதில் எதுகுறைவோ அத்தொகையாகும்.
- தவிசாளர் குறித்த கிளையின் பொதுச்சபையில் இருந்து கிளைக் குழுவிற்கான ஒன்பது (09) உறுப்பினர்களைத் தெரிவு செய்யும்படி கிளையின் பொதுச் சபையைக் கோருவார். இதில் குறைந்தது இருவராவது(02) 18 வயதிற்கும் 35 வயதிற்கும் இடைப்பட்டவராக இருத்தல் வேண்டும்.
- சபையிலிருந்து கிடைக்கப்பெறும் முன்மொழிவுகள் ஒன்பது (09) பேருக்கு மேற்படின் தவிசாளர் இரகசிய வாக்கெடுப்பின் மூலம் தெரிவினை மேற்கொள்ளுவார்.
- இரண்டு வேட்பாளர்களுக்கு அல்லது இரண்டுக்கு மேற்பட்ட வேட்பாளர்களுக்கிடையே சம வாக்குகள் கிடைக்கப் பெறும் பட்சத்தில் திருவுளச் சீட்டு மூலம் தெரிவு மேற்கொள்ளப்படும்.
- தெரிவு செய்யப்பட்டவர்களின் பெயர்களைத் தவிசாளர் கிளையின் பொதுச் சபையில் பிரகடனப்படுத்துவதுடன் சங்கச் செயலாளருக்கும் எனக்கும் எழுத்து மூலம் அறிவிப்பார்.
- தகுதியுள்ள கிளைப் பொதுச்சபை அங்கத்தவர்களுக்குக் கிளைக் குழுத் தெரிவு தொடர்பான அறிவித்தல்கள் தனித்தனியாக அனுப்பிவைக்கப்படுகின்றன. இவ்வறிவித்தல்கள் கிடைக்கப்பெறாத எவரேனும் தகுதியுள்ள அங்கத்தவர்கள் இவ்வறிவித்தலை ஏற்றுக்கொண்டு இக்கிளை பொதுச்சபை நடைபெறும் திகதிகளில் தங்களுக்குரிய கிளைப் பொதுச்சபைக் கூட்டத்திற்குச் சமுகமளித்துக் கிளைக் குழுவைத் தெரிவுசெய்யுமாறு வேண்டுகின்றேன்.

**கிளைப் பொதுச் சபைக் கூட்டங்கள் தொடர்பான விவரம்:**
**கிளைப் பொதுக் கூட்டங்கள் நடைபெறும் திகதியும் காலமும்**
**23.03.2008 ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10 மணி**

| தொடர் இல | கிளை இல | கிளையின் பெயர் | கிளைப் பொதுச்சபைக் கூட்டம் நடைபெறும் இடம் | கிளைப் பொதுச் சபைக் கூட்டத்தினை அழைக்கும் தவிசாளர் பெயர் |
|---|---|---|---|---|
| 01 | 01 | கொடிகாமம் | யா/கொடிகாமம் திருநாவுக்கரசு மகா வித்தியாலயம் | சு.கணேசு |
| 02 | 02 | கச்சாய் பாலாவி | யா/கச்சாய் அ.த.க. பாடசாலை | ச.பாலகுமார் |
| 03 | 03 | வினோபா | வினோபா ச.ச.நிலையம், கச்சாய் | இ.சி.ஸ்ரீதரன் |
| 04 | 04 | அல்லாரை | யா/அல்லாரை அ.த.க. பாடசாலை | க.சசீந்திரன் |
| 05 | 05 | மந்துவில் மத்தி | யா/மந்துவில் றோ.க.த.க. பாடசாலை | ந.பிரபாகரன் |
| 06 | 06 | மந்துவில் | யா/மந்துவில் ஸ்ரீ பாரதி வித்தியாலயம் | க.கமலநாதன் |
| 07 | 07 | இயற்றாலை | யா/இயற்றாலை அமெரிக்கன் மிஷன் த.க. பாடசாலை | க.நிமலன் |
| 08 | 08 | வட வரணி | யா/வரணி வடக்கு சைவப்பிரகாச வித்தியாலயம் | அ.தயாளன் |
| 09 | 09 | இடைக்குறிச்சி | யா/இடைக்குறிச்சி ஸ்ரீ சுப்பிரமணிய வித்தியாலயம் | க.திஸாகரன் |
| 10 | 10 | நாவற்காடு | நாவற்காடு 10 கிளை மண்டபம் | அ.ஜேம்ஸ்மேஷன் |
| 11 | 11 | நவஜீவனம் | யா/கொடிகாமம் திருநாவுக்கரசு ம.வி. | த.செல்வசோதி |
| 12 | 12 | மிருசுவில் | யா/மிருசுவில் அ.த.க.பாடசாலை | ரி.என்:ராஜா |
| 13 | 13 | விடத்தற்பளை | யா/விடத்தற்பளை கமலாசினி வித்தியாலயம் | திருமதி க.நல்லதம்பி |
| 14 | 14 | எழுதுமட்டுவாள் | யா/கொடிகாமம் திருநாவுக்கரசு ம.வி. | வி.ஜெயந்தன் |
| 15 | 15 | நாவற்காடு | யா/நாவற்காடு கணபதிப்பிள்ளை வித்தியாலயம் | தி.வித்தககலாநிதி |
| 16 | 16 | கரம்பைக்குறிச்சி | யா /வரணி மகாவித்தியாலயம் | க.சசிகரன் |
| 17 | 17 | கெற்பேலி | வீரபத்திரர் ச.ச.நிலையம், கெற்பேலி | ஐ.நாகேஸ்வரன் |
| 18 | 18 | தவசிகுளம் | யா/போக்கட்டி றோ.க.த.க. பாடசாலை | இ.விஜயமோகனராசா |
| 19 | 19 | உசன் | யா/உசன் இராமநாதன் ம.வித்தியாலயம் (தற்காலிக அமைவிடம்) | வை.கைலைநாதன் |

*முக்கிய குறிப்பு :* வாக்களிக்கத் தகுதியுள்ள சகல உறுப்பினர்களுக்கும் தபால் மூலம் அறிவித்தல் ஏற்கனவே அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. அறிவித்தல் கிடைக்கப்பெறாதவர்களும் இவ்வறிவித்தலை தனிப்பட்ட அறிவித்தலாக ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

கூ.அ.உ. ஆணையாளர் பணிமனை ,
யாழ்ப்பாணம்.
07.03.2008 (சி/551744)

ஒப்பம் : பொ.சிவலிங்கம்
கூ. அ. உ. ஆணையாளர்,
யாழ்.மாவட்டம்.

# பெண் விடுதலை சம்பந்தமான கோஷங்கள் மட்டும் பயன்தரா; அவள் ஏனையோரைச் சார்ந்து நிற்கும் நிலை மாற்றப்படவேண்டும்

## மகளிர் உரிமைகள் குறித்த விழிப்புணர்வைப் பரவலாக்குவது பிரதானம்

தமிழர் வாழ்வில் சங்க காலத்தில் பெண்கள் சம உரிமையுடன் வாழ்ந்து வந்தனர். காக்கைபாடினியார், நச்செள்ளையார் முதலிய சங்க



காலத்துப் பெண் புலவர்கள் இதற்குச் சான்றாக விளங்குகிறார்கள்.

இடைக்காலத்திலேதான் பாவையர் கல்வியும் உரிமையும் மறுக்கப்பட்டு அடக்கப்பட்டார்கள். படிப்பது பாவம் என்னும் பழி உரையால் சமுதாயத்தில் கடை நிலைக்குத் தள்ளப்பட்டார்கள். ''பெண்களுக்கு எதைக் கொடுத்தாலும் கொடு கல்வியறிவை மட்டும் கொடுத்துவிடாதே'' என்னும் ஆணாதிக்க மொழியால் முடக்கப்பட்டார்கள். சாதிப் பிரிவுகளால் சோபையிழந்து நலிந்தார்கள். சீதனக் கொடுமையால் எதிர்காலம் என்னாகுமோ என்று கவலைப்பட்டனர். விதவைகள் என்ற பெயரால் உடன் கட்டை ஏற்றப்பட்டார்கள். குழந்தை மணத்தால் குற்றுயிர் ஆக்கப்பட்டார்கள். பொருந்தா மணத்தால் புலம்பல், காதல் மணத்தடைகளால் தற்கொலைகள் என இன்று பெண்கள் பல கொடுமைகளை அனுபவித்து வருகின்றனர். அத்துடன் ஆணாதிக்க கலாசாரமும் தலைவிரித்தாடும்பொழுது பெண்கள் வியாபாரப் பண்டமாக பயன்படுத்தப்பட்டு வருகிறார்கள்.

நுகர்வுப் பொருளாதார விளம்பரத் துறையில் ஆதிக்கம் செலுத்தும் ஆண்கள் பெண்களை விளம்பரங்களில் கவர்ச்சிப் பண்டமாக பாவிக்கிறார்கள். அதுமாத்திரமல்ல, கலாசாரத்தில் பிரதான அம்சமான கலை, இலக்கியத் துறையிலும் ஆணாதிக்கம்தான் தலைதூக்கி நிற்கின்றது. சிறுகதை, நாவல்களின் முன் அட்டைகளைப் பார்த்தால் இது நன்றாகப் புலப்படும். விற்பனையாகின்ற அனேக நூல்களின் முன் அட்டைகளில் பெண்களின் கவர்ச்சிப் படங்கள்தான் காணப்படுகின்றன.

எமது பாரம்பரியத்திற்கும் பண்பாட்டிற்கும் கலாசாரத்திற்கும் ஒவ்வாத வகையில் பெண் குலத்தையே அவமானப்படுத்தி நவீன துச்சாதனர்கள் தங்களது விளம்பரங்களில் பெண்களை மையமாகப் பயன்படுத்தி துகிலுரி படலத்தையும் நடத்தி வருகின்றனர்.

இதனிடையே சீதனம் என்றொரு வடம் பெண்ணினது இல்வாழ்க்கையை இறுகக் கட்டியுள்ளது. 'மங்கையராகப் பிறப்பதற்கு பெரும் மாதவம் செய்திட வேண்டுமம்மா' என்று பாடி பெண் குலத்தை மேம்படுத்தினான் ஒரு கவிஞன். அது கற்பனை உலகக் கனவு. இன்றைய யாதார்த்த உலகினைப் பார்க்கும்போது ''மங்கையராகப் பிறப்பதற்கே பெரும் பாதகம் என்ன செய்தோமம்மா'' என்று ஒப்பாரி பாடத்தான் தோன்றுகின்றது.

பத்து மாதம் தன் வயிற்றில் சுமந்து பெற்றெடுத்தும் என்ன பிள்ளை என்று அறிய அந்தத் தாய் மனம் துடியாய்த் துடிக்கிறது. ஆணாக இருக்கக்கூடாதா இறைவா என்று ஏங்குகிறது. பிறந்தது பெண்பிள்ளை என்றால் போதும். கடவுளே... என்றபடி மூச்சையாகிப் போகிறாள் அந்தத் தாய். இதற்கு மேல் அந்தப் பிள்ளையை இந்த உலகத்தை விட்டே அனுப்பிவிடவேண்டும் என்று எண்ணுபவர்களும் இருக்கின்றார்கள். கசப்பானதாக இருந்தாலும் உண்மை நிலை இதுதான்.

ஆண் பிறந்தால் 5 லட்சத்திற்கு வரவுக் கணக்கு பெண் பிறந்தால் 5 லட்சத்திற்கு செலவுக் கணக்கு என்ற பழமொழி உழுத்துப் போன சமுதாயத்தின் பொன் முலாம் பூசப்பட்ட பெயர்ப்பலகை.

எனவே, எல்லோரையுமே சஞ்சலத்திற்கும் கவலைக்கும் உள்ளாக்கும் இந்தச் சீதனத்திற்குக் காரணம் யார் என்று சிந்திக்கவேண்டும். அப்படிச் சிந்திக்கும்போது நாம் ஒவ்வொருவரும் நம்மை அறிந்தோ அறியாமலோ காரணமாய் இருக்கிறோம் என்ற உண்மை புரியும்.

ஒரு பெண் மணப்பெண்ணாக இருக்கும்போது சீதனம் இல்லாததால் என் வாழ்வு மலரவில்லையே என்று ஏங்குகிறாள். அதேவேளை, தன் தகுதிக்கேற்ற மணமகனை மணந்து வாழவும் அவள் மனம் ஒப்புக்கொள்வதில்லை. நாலு பேரைப் போல தானும் சகல வசதிகளுடனும் வாழவேண்டும். அதற்குரிய சீதனத்தை தனது பெற்றோரோ சகோதரரோ தரவேண்டும் என்ற விருப்பமே அவள் மனதில் குடிகொள்கிறது.

அதே பெண் தாய் என்னும் பாத்திரமாக மாறும்போது சீதனக் கொடுமையால் பெண்ணை வாழவைக்க முடியவில்லையே எனத் திட்டுகிறாள்.

அதே பெண் மாப்பிள்ளையின்

### இன்று உலக மகளிர் நாள்

தாயாகும்போது, தன் மகனுக்கு உச்சமான சீதனத்தை எதிர்பார்க்கின்றார். தந்தையிலும் பார்க்கத் தாய்தான் இந்த விடயத்தில் கண்டிப்பாக இருப்பது கண்கூடு.

ஒரே பெண் வெவ்வேறு சந்தர்ப்பங்களிலும் வெவ்வேறு குணாதிசயங்களை உடையவராக இருக்கும் நிலையே சீதனப்பிரச்சினையைச் சிக்கலானதாக ஆக்குகின்றது.

ஆகவே எங்கள் ஒவ்வொருவர் மனப்பாங்கிலும் மாற்றம் ஏற்படவேண்டும். மற்றவரைப் போல நானும் வாழவேண்டும் எனும் போலி வாழ்வைக் கைவிட்டு ''நான் எனக்கென்று ஒரு வாழ்வை அமைப்பேன்'' என உறுதியும் செயற்றிறனும் எம்மிடம் குடிகொள்ளவேண்டும்.

வருடா வருடம் பெண்கள் தினத்தைக் கொண்டாடுவதோடு எமது கடமை முடிந்துவிடுவதில்லை. இந்தத் தினத்தின் உண்மையான அர்த்தம் பற்றி நாம் ஆழமாகவே சிந்திக்கவேண்டும். பெண் விடுதலை தொடர்பாகச் சிந்திப்போர் ஊக்கம் பெறவும் நாடு தழுவிய ரீதியில் பெண்களின் பிரச்சினைகள் பற்றிய விழிப்புணர்வு பரவலாக்குவதற்கும் பெண்கள் தின நிகழ்வுகள் உதவ வேண்டும். பெண் விடுதலை தொடர்பாக வெறும் கோஷங்கள் எழுப்புவதை விடுத்து ஆக்கபூர்வமான பணிகளில் நாம் ஈடுபடவேண்டும்.

பெண்களைச் சுற்றிப் பிணைக்கப்பட்டுள்ள அவளது உள்ளத்திற்கும் உடலுக்கும் துயரங்களை விளைவிக்கின்ற முட்கம்பிகள் அறுத்தெறியப்படவேண்டும்.

''ஆணின்றிப் பெண்ணில்லை பெண்ணின்றி ஆணில்லை இருவரும் சேர்ந்தே இகம்'' என்ற நிலை உருவாகி தரணியில் தமிழர் மீண்டும் பரணி பாடிடத் தையலர் தலை நிமிர்ந்து வாழவேண்டும்.

கம்சினி சண்முகரட்ணம்.

### உலகிலே உயர்ந்த மாது

உலக மாதர் எல்லாம்
உவப்புடன் ஒன்று கூடி
உலக மாதர் தினத்திலின்று
உரிமைப்போர் தொடுக்கின்றாரே
உலகினில் மாந்தர்க் கெல்லாம்
ஒப்பரும் தலைவி எங்கள்
உலகுக்கே நீதி சொன்ன
உத்தமி ஒளவை யன்றோ
உலக வாழ் மாதர் உம்தன்
உய்வினை உறுதி செய்ய
உலகுக்கு ஒளவை சொன்ன
உன்னத கருத்தை யெல்லாம்
உலக வாழ் மாதர் நீவீர்
உடன் மொழி பெயர்த்து கொள்வீர்
உலகினில் உயர்ந்த மாது
உத்தமி ஒளவை என்று
உலகதும் புகழக் கேட்டு
உவக்கின்றார் தமிழர் அன்றோ!



- விகடகவி.

## பெண்கள் துணிவு கொண்டால் சுயமாக வாழமுடியும்

''மாதர் தம்மை இழிவு செய்யும் மடமையைக் கொழுத்துவோம்'' எனப் பெண்ணுரிமைக் கவி பாரதியர் எடுத்தியம்பிய வரிகளுக்காக இத்தனையாண்டுகள் ஆகியும் நம் பெண்கள் போராடவேண்டி இருக்கிறது. இன்று உலகளாவிய ரீதியில் பெண் இனமானது தனி உரிமை, சமத்துவம், சுதந்திரம், அரசியல் விடுதலை, தன்னாட்சி என்பவற்றை கொண்டுள்ளது என பேசப்பட்டாலும் சுயமாகத் தலை நிமிர்ந்து வாழவேண்டுமாயின் இன்றுள்ள சமூக வார்ப்புக்களும், வழக்கங்களும், நெறிமுறைகளும், நீதி முறைகளும் மீள் பரிசீலனைக்கு உட்படுத்தப்படவேண்டும்.

காலம் காலமாகத் திட்டமிட்டு உருவேற்றப்பட்டு வரும் கருத்துகளால் மூளைச் சலவை செய்யப்பட்டு ஆணுக்கு பெண் கீழ்ப்பட்டவள் அவ்வாறு வாழ்வதே அவளுக்குப் பெருமையும் மகத்துவமும் என்று கருதும் சமூகம் இன்று வரை உள்ளது.

பெண் உரிமை, பெண் சுதந்திரம், பெண் சமத்துவம் என்பதன் தார்மீகக் கருத்தான மேலோட்டமான ஒன்றல்ல என்பதை நினைவில் கொள்வது அவசியம். சமூக ஒழுங்கையும் தனித்து வத்தையும் பேணுவதற்கு குடும்ப அமைப்பை சீர்குலைக்காமல் பாதுகாப்பதற்கும் சில சட்ட திட்டங்களும் விதிகளும் அவசியமானதாகும். ஆனால், இச் சட்ட திட்டங்களும் விதிகளும் ஆணை ஒருகண்ணோட்டத்திலும் பெண்ணை வேறொரு கண்ணோட்டத்திலும் நோக்கும்போது முரண்பாடு பிறக்கிறது. சமத்துவதற்கான வழி மூடப்படுகின்றது.

சமூக மேம்பாட்டிற்கு அவசியம் எனக் கூறப்படும் ஒழுக்கவியல் சார்ந்த சமூக, சட்ட நெறிகள் எங்களுக்கு மட்டுமே உரித்துடையவை என்ற கருத்துக்கு அப்பாற் பட்டு பெண்கள் மீது அவை கொடுக்கும் அதே அளவு அழுத்தம் ஆண்கள் மீதும் பிரயோகிக்கப்பட வேண்டும். அப்போது மட்டுமே சமுதாய சமநிலை நிலவும். இச்சமநிலையே ஆரோக்கியமான உலகு தோன்ற வாய்ப்பை ஏற்படுத்திவிடுகிறது. பிறக்கும்போது சுதந்திரமாக பிறக்கும் பெண், பால் நிலைப் பாரபட்சம் காரணமாக ஒதுக்கப்பட்டு ஓரங்கட்டப்படுகிறாள். உரிமைகள் மறுக்கப்பட்டு, ஒவ்வொரு பெண்ணின் ஆளுமையும் தன் நம்பிக்கையும் சிதைக்கப்படுகின்றன.

உலகளாவிய ரீதியில் பெண்கள் மேல் நிலையை அடைந்து சமூக, கலாசார, பண்பாட்டு மட்டத்தில் காட்டப்படும் உரிமை மறுப்புகளை உடைத்தெறிய வேண்டும். ஒவ்வொரு பெண்ணும் தமது உரிமையை உணர்ந்து விழிப்புடன் செயற்பட்டு பாரபட்சமற்ற சமுதாயத்தைக் கட்டிஎழுப்ப உழைக்கும்போது காலம் காலமாக தேடிய பெண்உரிமைகள் அனைத் தையும் பெற்றுக்கொள்ளமுடியும். ஒவ்வொரு தளத்திலும் புரட்சிக்கும் மாற்றத்திற்கும் பெண்கள் அடித்தளமிட வேண்டும் ''பெண்ணாலும் முடியும்'' என்ற தன்நம்பிக்கையுடன் ஒவ்வொரு பெண்ணும் துணிவு கொள்ளும்போது சுயமான வாழ்வை வாழ முடியும். அதற்கான திடசங்கற்பத்தை இந்நாளில் ஏற்படுத்திக்கொள்ள வேண்டும்.

சு.தமனிகை
சமூகவியல்துறை, யாழ்.பல்கலைக்கழகம்.

## அமைதி நிலவிட அன்பினில் வாழ்வோம்

''நீங்கள் தொடக்கத்தில் இருந்து கேட்டறிந்த செய்தி இதுவே: நாம் ஒருவர் மற்றவரிடம் அன்பு செலுத்தவேண்டும்'' (1யோ 3:11).

அன்பு எனும் வார்த்தைக்கு ஆயிரம் அர்த்தங்கள் இருந்தாலும் உண்மையான அன்பின் சிகரமாக விளங்குபவர் இயேசு கிறிஸ்து ஒருவரே. தன் உயிரையே தியாகம் செய்யும் அளவிற்கு அவர் எங்கள் மேல் அன்புகூர்ந்தார். பண்புகளில் சிறந்த, பரந்த திறந்த பண்பு அன்பு. வாழ்க்கையின் அவசியமான பண்பு அன்பு ஒன்றே.

இயேசு கிறிஸ்து அன்பைப் போதித்தார். வாழ்க்கையில் சாதித்தார். அன்பில் குறைபடுவோமானால் நாம் கிறிஸ்தவ வாழ்க்கையில் குறைவுபடுகின்றோம். கிறிஸ்தவ வாழ்க்கை என்பது அன்பினில்தான் அடங்கியுள்ளது. இயேசு கிறிஸ்துவை உடையவன் அன்புடையவன். இயேசு கிறிஸ்து இல்லாதவன் அன்பில் குறைவுபட்டவன்.




இயேசு காட்டிய தூய அன்பு விளங்கமுடியாத அன்பு, விந்தைக்குரிய அன்பு, வியப்பிற்குரிய அன்பு. சிலுவை மரத்தில் தொங்கி எம் பாவங்களை ஏற்றுக்கொண்டு எமக்காக உயிர் துறந்த அன்பே விந்தைக்குரிய அன்பு. இயேசு பாவத்தை வெறுத்தார். ஆனால், ஒருபோதும் பாவிகளை வெறுக்கவில்லை. மாறாக அவர்கள் மேல் அன்பு கூர்ந்தார்.

கிறிஸ்தவ வாழ்க்கையின் குறிக்கோள் நாம் அன்பைப் பறை சாற்றுகின்றவர்களாக மட்டும் இராமல் அன்பை வாழ்க்கையில் கைப்பிடிப்பவர்களாக இருக்கவேண்டும். அன்பின் போதனையை அல்ல அன்பின் சாதனையையே கிறிஸ்து விரும்புகிறார். நாம் அவருடைய அடிச்சுவடுகளைப் பின்பற்றி அன்பின் உருவமாக விளங்க வேண்டும். யுத்தத்தால் எம் மண்ணிலே நின்றாடும் ஓல அவலவொலிகள் நீங்கி அகிலமெங்கும் அமைதி நிலவிட கிறிஸ்துவின் அன்பில் வாழ்ந்திடுவோம்.

தே.கரன்ஸ் (அ.ம.தி).

# சர்வதேச மகளிர் தினம்-2008

CWD

பெண்கள் மீதான வன்முறைகள் மனித உரிமைகளை மீறும் செயலாகக் கருதப்படுகின்றது.




இன்றும் பெண்கள் பாரபட்சங்களுக்கும் பால்நிலை வதைகளுக்கும் முகம் கொடுக்க வேண்டியுள்ளது.

## வன்முறைகளுக்கும் பாரபட்சங்களுக்கும் மறுப்புத் தெரிவியுங்கள்

### காலத்தின் தேவையை உணர்ந்து.....

#### மகளிர் அபிவிருத்தி நிலையத்தின் செயற்பாடுகள்

- ஆரம்ப காலத்தில் இருந்து பெண்களின் வாழ்வில் வளமூட்டக் கூடிய வகையில் உதவிகளை இந்நிறுவனம் செயற்படுத்தி வருகின்றது.
- இடப்பெயர்வுக் காலங்களில் மக்களுக்கு வேண்டிய உதவிகளை இந்நிறுவனம் வழங்கியது.
- மன அழுத்தங்கள் நிறைந்த காலங்களில் பல கருத்தரங்குகள், கருத்துரைகள் ஆகியவை நடத்தி அழுத்தங்களின் செறிவுகளை குறைக்க வழிவகுத்துள்ளது.
- சமூகத்தின் முரண்பாடுகள் பற்றிய விழிப்புணர்வுகளை ஏற்படுத்த பாடசாலை மாணவர்களிடையே கருத்தரங்குகள் நடத்தப்பட்டன. இவை பயனுடையனவாக அமைந்தன.
- சமாதானத்தின் முக்கியத்துவத்தை உணர்த்த வேண்டிய காலத்தில் பல கருத்தரங்குகள் புரிந்துணர்வுக் கூட்டங்கள் நடத்தப்பட்டன.
- சுயதொழில் வாய்ப்புக்கள், வாழ்வாதார உதவிகள் தேவைக்கேற்ப செயற்படுத்தப்பட்டன. போசாக்கின்மையால் வாடும் கற்பிணித் தாய்மார்களுக்கும் பிள்ளைகளுக்கும் சத்துமா வழங்கும் திட்டம் செயற்படுத்தப் பட்டு வருகின்றது.
- பெண்களுக்கு வலிமை சேர்க்க சுயதொழில் போன்ற செயற்திட்டங்கள் செயற்படுத்தப் படுகின்றது.
- பாதிக்கப்பட்ட பெண்களின் விவரங்கள் சேகரிக்கப்பட்டு ஆவணப்படுத்தப்பட்டு வருகின்றன. இதில் பல பெண்களுக்கு வேலை வாய்ப்பு கொடுக்கப்பட்டுள்ளது.

எனவே சர்வதேச பெண்கள் தினமான இன்று மகளிர் அபிவிருத்தி நிலையத்தின் தொண்டுகளை நினைவுகூர வேண்டியது எனது கடமை என நான் எண்ணுகின்றேன்.

இந்நிறுவனத்தை சிறந்தமுறையில் நடத்தி வரும் பணிப்பாளர் சறோஜா சிவச்சந்திரன் அவர்களிற்கு பெண்கள் சார்பில் என் நன்றி உரித்தாகுக.

**திருமதி சின்னையா,**
விரிவுரையாளர்,
தேசியக் கல்வி நிறுவனம்.

### பணிகள் மேலும் சிறக்கட்டும்!

மகளிர் அபிவிருத்தி நிலையத்தின் முயற்சிக்கு எனது ஆதரவையும் ஒத்துழைப்பையும் வழங்குவதோடு மகளிர் அபிவிருத்தி நிலையத்தினால் மேற்கொள்ளப்படும் பணிகள் மேலும் சிறக்க எனது வாழ்த்துக்கள்.

**திருமதி சரோஜினி இளங்கோவன்**
மாவட்ட நீதிபதி, மல்லாகம்.

### பெண் உரிமை மனித இனத்தின் உரிமை

முன்னேற்றத்தை சரியாக வடிவமைத்தல் என்ற கருப்பொருளை மையமாக கொண்டு இவ்வருடத்திற்கான சர்வதேச மகளிர்தினம் உலகளாவிய ரீதியில், பல நிகழ்ச்சித்திட்டங்கள் செயற்பாடுகளோடு கொண்டாடப்படுகின்ற மகளிர் உயற்சியின் வெற்றியை மதிப்பிடுகின்ற நாளாகும். போர், வன்முறைகள் ஒருபுறம் தாக்கத்தை ஏற்படுத்திய போதிலும் பண்பாட்டில் பெண்கள் மீது ஏற்படுத்தப்பட்ட கருத்துருவாக்க சிந்தனையில் முற்போக்கான மாற்றம் சமூகமட்டத்தில் ஏற்படுவது தேவையாகும். பெண்கள் தமது ஆற்றலுக்குரிய அடையாளங்களை நிலைநிறுத்துவதில் முனைப்படைய வேண்டும். பெண்கள் நலிவடைந்தவர்களோ அன்றி இரண்டாம் தரப் பிரஜைகளோ அல்ல. இவை எல்லாம் தாமாகவே தமக்குப் போட்ட தடைகளே. பெண் உரிமை ஏதோ ஓர் சித்தாந்தம் என்று நாம் விலகி விட முடியாது. இது மனித இனத்தின் உரிமை. பெண்கள் நீதியாகவும் சமத்துவமாகவும் வாழும் போதே உலகம் மேன்மையடையும். பெண்கள் சம உரிமையுடன் வாழவேண்டுமாயின் சமுதாயத்தில் எவை எவை ஒழிக்கப்பட வேண்டும், பதிலாக எவை உருவாக்கப்பட வேண்டும், பெண்கள் இதற்காக எதனை கடைப்பிடிக்க வேண்டும். எவ்வாறான விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட வேண்டும், பெண்களுக்கான உரிமைகளுக்கு எங்கே கட்டுக்கள் போடப்படுகின்றன! இவற்றை உடைக்கவேண்டாம்! மாறாக உங்கள் அறிவுக்கூர்மை, ஆளுமை, கல்விச் செயற்பாட்டின் புத்தூக்கத்தின் துணையில் மெதுவாகவே அவிழ்த்து விடுங்கள் பெண்களுக்கு ஆளுந்திறன் உண்டென்பதை விரைவில் செயற்படுத்துவீர்.

**திருமதி சறோஜா சிவச்சந்திரன்**
பணிப்பாளர்,
மகளிர் அபிவிருத்தி நிலையம்.

### பொருளாதார ரீதியில் வலுப்பட வேண்டும்

இன்று பெண்கள் கல்வியில் முன்னேற்றத்தை பெற்றபோதும் தொழில் சந்தையில் திறனற்ற தொழில் புரிபவர்களாகவும் வேலை வாய்ப்பு அற்றவர்களாகவும் காணப்படுகின்றனர். தேசிய ரீதியில் பெண்களுக்கான அமைச்சு, பெண்கள் பணி யகம், பெண்கள் பற்றிய தேசிய குழு, என தனியான அமைப்புகள் இயங்குதல் மகிழ்ச்சிக்குரிய விடயமாகும். மேலும் வீட்டு வன்முறைக்கென தனியான சட்டம் கொண்டுவரப்பட்டமை, தண்டனைச் சட்டக் கோவையில் மாற்றம் ஏற்படுத்தியமை என்பன பெண்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்த மேற்கொண்ட குறிப்பிடத்தக்க அம்சமாகும். எனினும் பெண்களை பொருளாதார ரீதியாக வலுப்படுத்த வேண்டிய தேவை உள்ளது.

நாம் பெண்களுக்கெதிரான பாரபட்சங்களை நீக்க சர்வதேச மகளிர் தினத்தில் மட்டும் அல்லாது வருடம் பூராகவும் காத்திரமான தொடர்ச்சியான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டியது அவசியமாகும். எனவே இத்தருணத்தில் நாம் பால்நிலை வேற்றுமைகளைக் களைந்து பெண்களும் ஆண்களும் சமஉரிமை பெற்றுக்கொள்ள ஒன்றிணைந்து செயற்பட உறுதிகொள்வோம்.

**உதயனி நவரத்தினம்,**
பெண்கள் அபிவிருத்தி உத்தியோகத்தர்.

### பெண்களின் நிழற்பணி

சர்வதேச மகளிர் தினம் கொண்டாடப்படும் இந்நாளில் பெண்ணியம், பெண் உரிமை, பெண் விடுதலை, பெண்ணிலைவாதம் எனப்பலவாறாக வகுத்தும், தொகுத்தும் விமர்சிக்கப்படுகின்றன. பெண்கள் பொருளாதார வலுவில் பெறுகின்ற துரித வளர்ச்சி நோக்கப்படுகின்றது. ஆயினும் இது பெரும் பங்களிப்பாகக் கருதப்பட வேண்டியதாகும். இந்நாளில் இது வலியுறுத் தப்படவேண்டியதுமாகும். உயர் கல்வி பெற்று உயர்வேலைவாய்ப்பு பெற்ற பெண்களதும், அவற்றைப் பெற்றுக்கொள்ள வாய்ப்பில்லாத பெண்களும் செய்யும் நிழற்பணி பற்றி இந்நாளில் யாவரும் சிந்திப்போமாக.

மிகை உற்பத்திக்கு பெண்கள் வழங்கும் பங்கு புறக்கணிக்கப்படுகிறது. பெண்கள் செய்யும் வீட்டு வேலைகள் மதிப்பீடு செய்யப்படுவதேயில்லை.

பிள்ளைகளைப் பராமரித்தல், பெற்றோரை கவனித்தல், ஏனைய வீட்டுப் பணிகள் என்ற வகையில் உழைப்புச் சக்தி சார்பாக கெண்களின் பங்களிப்பு பொருளாதாரப் பங்களிப்பாக கருதப்படுவதேயில்லை. இவற்றின் பெறுமதி, முக்கியத்துவம் பற்றிய சிந்தனை தேவை என்பதும் வலியுறுத்தப்பட வேண்டும். பெண்களின் அறிவையும் அனுபவங்களையும் நிபுணத்துவத்தையும், தலைமைத்துவத்தையும் ஓரங்கட்டாது சமூகத்தில் இவை செறிவாக்கப்பட வேண்டும்.

மனித வளத்தின் உச்சப்பயன்பாட்டில், பெறுமானத்தில், மகளிர் அபிவிருத்தியின் முக்கியத்துவம் உணர்த்தப்படவேண்டும். பெண்களின் தலைமைத்துவப் பண்புகள் காக்கப்பட வேண்டும், வீட்டில், பாடசாலையில், சமூகத்தில், தொழில் நிறுவனங்களில் இவை மதிப்பளிக்கப்படும் போது நிழற்பணி உயிரோட்டம் பெறுவதாகும். மரியாமைஸ் குறிப்பிடும் நிழற்பணியும் புத்தூக்கம் பெற, மகளிர் நலன்பேணும் மகளிர் அபிவிருத்தி நிலையம் நிலைத்துச் செயற்பட, மகளிர் அபிவிருத்தியில் எதிர்கொள்ளும் தடைகள் அகல இந்நாளில் வாழ்த்துகின்றேன்.

**திருமதி த.விஸ்வநாதன்,**
(தேசிய கல்வி நிறுவக சிரேஸ்ட விரிவுரையாளரும், யாழ்.பிராந்திய இணைப்பாளரும்)

## மகளிர் அபிவிருத்தி நிலையம், யாழ்ப்பாணம்.

# பாடசாலைச் சுகாதாரத் தொழிலாளர்களுக்கான ஆளணி வெற்றிடங்கள் நிரப்பப்படவேண்டும்

## கல்வித் திணைக்களத்திடம் கரவெட்டிப் பிரதேச செயலர் கோரிக்கை

வடமராட்சி,மார்ச்8

பாடசாலைகளில் சுகாதாரத் தொழிலாளர்களுக்கான ஆளணி வெற்றிடங்களை நிரப்புவதற்கு உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனக் கரவெட்டிப் பிரதேச செயலர் எஸ்.சத்தியசீலன் கல்வித் திணைக்களத்திடம் கேட்டுள்ளார்.

பிரதேச மட்டச் சிறுவர் கண்காணிப்புக் குழுக்கூட்டம் அண்மையில் பிரதேச செயலகத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் தலைமையுரை நிகழ்த்தும்போதே பிரதேச செயலர் இக்கோரிக்கையை விடுத்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது: சிறுவர் பிரச்சினைகள் தொடர்பாகக் கூடுதலான கண்காணிப்பு, கவனம் இருக்கவேண்டியது அவசியமாகும். இனங்காணப்படும் பிரச்சினைகளுக்கு உரிய முறையில் தீர்வுகள் காணப்படவேண்டும். இவ்விடயத்தில் சகல நிறுவனங்களும் திணைக்களங்களும் கூட்டுப் பொறுப்பாகக் கவனம் எடுக்கவேண்டும்.

இப்பிரதேச பாடசாலைகளை வெளிநபர்கள் மூலம் துப்பரவு செய்வதற்கு பிள்ளைகளிடம் காசு வாங்குவதாக முறைப்பாடுகள் கிடைத்துள்ளன. பிள்ளைகளிடம் கல்வி நடவடிக்கைகளுக்கு காசு எதிர்பார்ப்பது தவிர்க்கப்படவேண்டும். பாடசாலைகளைத் துப்பரவு செய்வதற்கு பாடசாலை நிர்வாகமே தற்காலிக ஒழுங்கு செய்ய வேண்டும் - என்றார். (202-160)

# யாழ்.மாவட்டத்தில் அனுமதிப்பத்திரமின்றி ஏற்புநோய் தடுப்பூசி மருந்துகள் விற்பனை

## சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்கிறார் மருந்துப் பரிசோதகர்

வலி.தென்மேற்கு,மார்ச்8

யாழ்.மாவட்டத்தில் பல்வேறு இடங்களிலும் ஏற்புநோய் தடுப்பு ஊசி மருந்துகள் (Toxide) மருத்துவ அனுமதிப் பத்திரம் இன்றியும் சரியான முறையில் பாதுகாக்கப்படாமலும் விற்பனை செய்யப்பட்டமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

சுகாதார அதிகாரிகள் மேற்கொண்ட திடீர் சோதனையின்போதே இவ்வாறு விற்பனை செய்யப்பட்டமை கண்டுபிடிக்கப்பட்டது.

இது உயிர் காக்கும் முக்கிய மருந்தாகக் கருதப்படுவதால் இவ்வாறு செயற்படுவது மக்களுக்கு ஆபத்தை ஏற்படுத்தும். எனவே உரிய அனுமதிப்பத்திரம் இல்லாமலும், உரிய குளிரூட்டி முறை மூலம் பாதுகாக்கப்படாமலும், பெறப்பட்ட இடத்தின் பற்றுச்சீட்டு இல் லாமலும் ஏற்புநோய் தடுப்பு ஊசி மருந்தை விற்பனைக்கு வைத்திருப்பவர்கள் மீது கடுமையான சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என யாழ். மாவட்ட உணவு, மருந்துப் பரிசோதகர் அறிவுறுத்தியுள்ளார். .(202-135)

### சரஸ்வதி வித்தியாலயத்தில் பெயர்வளைவு திறப்பு

யாழ்ப்பாணம்,மார்ச்8

சரசாலை சரஸ்வதி வித்தியாலய பழைய மாணவர்களால் அமைக்கப்பட்ட வித்தியாலய பெயர்வளைவை அண்மையில் முன்னாள் தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் திறந்துவைத்தார்.

இதேவேளை, யாழ்.கல்வி வலயத்திற்கு இடமாற்றல் பெற்றுச் செல்லும் வலயக் கல்விப்பணிப்பாளருக்குப் பாடசாலை சமூகத்தினரால் அன்றைய தினம் பிரிவுபசார விழா நடத்தப்பட்டதாகவும் வித்தியாலய அதிபர் தெரிவித்தார். (202-207)

### பிரிவுபசார விழாவும் வரவேற்பு விழாவும்

தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளராகக் கடமையாற்றி யாழ். வலயத்திற்கு இடமாற்றலாகிச் செல்லும் திருமதி அ.வேதநாயகத்திற்கு பிரிவுபசார விழாவும் புதிய வலயக் கல்விப்பணிப்பாளராகப் பொறுப்பேற்றுள்ள கு.பிரேமகாந்தனுக்கு வரவேற்பு விழாவும் நாளை ஞாயிற்றுக்கிழமை சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் அதிபர் அ.கயிலாயபிள்ளை தலைமையில் நடைபெறவுள்ளன.

வலயப் பாடசாலைகளின் அதிபர்களும் ஆசிரியர்களும் இணைந்து இவ்விழாவை நடத்தவுள்ளனர். (202-207)

# திக்கம் கிராமோதய சுகாதார நிலையத்தில் ஆயுள்வேத வைத்தியசாலை நிறுவக் கோரிக்கை

பருத்தித்துறை,மார்ச்8

பருத்தித்துறை திக்கம் கிராமோதய ஆரம்ப சுகாதார நிலையத்தில் ஆயுள்வேத வைத்தியசாலை ஒன்றை நிறுவுமாறு திக்கம் மத்திய சனசமூக நிலையம் யாழ்.பிராந்திய சுகாதார சேவைப்பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரனிடம் மகஜர் மூலம் கோரிக்கை விடுத்துள்ளது.

அம்மகஜரில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:

எமது சனசமூக நிலையத்தின் வேண்டுகோளுக்கு அமைய 'போரூட்' நிறுவனம் சுமார் 6 மில்லியன் ரூபா செலவில் கிராமோதய ஆரம்ப சுகாதார நிலையத்தை நிர்மாணித்து வழங்கியது. அந்த கிராமோதய ஆரம்ப சுகாதார நிலையத்தை தாங்கள் கடந்த மாதம் திறந்து வைத்துள்ளது மிக மகிழ்ச்சிக்குரியது.

ஆனால், குடாநாட்டில் நிலவும் வைத்தியர் பற்றாக்குறையினால் இக்கிராமோதய ஆரம்ப சுகாதார நிலையத்தைச் செயற்படுத்தமுடியாத நிலை உள்ளது.

இப்பிரதேச மக்கள் பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலைக்கோ அல் லது வல்வெட்டித்துறை மாவட்ட வைத்தியசாலைக்கோ செல்வதற்கு பல்வேறு பிரச்சினைகளை எதிர்நோக்கவேண்டியுள்ளது.

ஆகவே இம்மக்களுக்கு விமோசனம் வழங்குமுகமாக தற்போது கிராமோதய ஆரம்ப சுகாதார நிலையத்தில் ஆயுள்வேத வைத்தியசாலை ஒன்றை நிறுவி உதவுமாறு கேட்டுக்கொள்கின்றோம். எதிர்காலத்தில் வைத்தியர் பற்றாக்குறை நீங்கியதும் கிராமோதய ஆரம்ப சுகாதார நிலையச் செயற்பாடுகளை முன்னெடுக்க நடவடிக்கை எடுக்குமாறும் மேலும் கேட்டுக் கொள்கின்றோம் - என்றுள்ளது. (202-218)

### சான்றிதழ் வழங்கும் நிகழ்வு

யாழ்ப்பாணம்,மார்ச்8

யாழ்.பிரதேச செயலக உளவளத் துணைப் பிரிவின் உள சமூகப் பணிப் பயிற்சிக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு நாளை மறுதினம் திங்கட்கிழமை பிற்பகல் 2 மணிக்கு செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

பிரதேச செயலர் ம.ஜெகூ தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் பொ.பால சுந்தரம்பிள்ளை கலந்துகொள்வார். (202)

## குடாநாட்டின் பிரதேசச் செய்திகள்

### புற்றளை ம.வி.க்கு சிறுவர் பாதுகாப்பு நிதியம் கணணிகள் அன்பளிப்பு

பருத்தித்துறை,மார்ச்8

தென்புலோலி புற்றளை மகா வித்தியாலயத்திற்கு சிறுவர் பாதுகாப்பு நிதியம் 25 கணனிகளை வழங்கியுள்ளது. வித்தியாலய அதிபர் ஆர்.அனந்திஸ்வரன் இக்கணனிகளைப் பொறுப்பேற்றுள்ளார். இதற்கான தளபாட உபகரணங்களும் வழங்கப்பட்டுள்ளன.

இதேவேளை, இவ்வித்தியாலயத்திற்கு சுமார் 30 இலட்சம் ரூபா செலவில் விஞ்ஞான ஆய்வு கூடமொன்றும் சுமார் 7 லட்சம் ரூபா செலவில் செயற்பாட்டறையும் சுமார் 3 லட்சம் ரூபா செலவில் மலசலகூடமும் நிர்மாணிக்கப்பட்டு வருகின்றன. கல்வித் திணைக்களம் இந்த நிர்மாணங்களுக்கான நிதியை ஒதுக்கீடு செய்து வழங்கியிருந்தது.

'நிக்கொட்' நிறுவனத்தின் நிதி உதவியுடன் இவ்வித்தியாலயத்தில் சுமார் 10 லட்சம் ரூபா செலவில் நீர்த்தாங்கியொன்றும் நிர்மாணிக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (202-218)

### சந்நிதியான் அடியார்களுக்கு உடுபுடைவைகள் அன்பளிப்பு

வடமராட்சி,மார்ச்8

தொண்டைமானாறு செல்வச்சந்நிதி கோயிலில் வாழ்ந்துவரும் சுமார் 60இற்கும் மேற்பட்ட அடியார்களுக்கு முன்னாள் இந்து கலாசார அமைச்சரும் யாழ்., கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான அமரர் தி.மகேஸ்வரன் ஞாபகார்த்தமாக உடுபுடைவைகளும் பணமும் சந்நிதியான் ஆச்சிரமத்தினால் வழங்கப்பட்டன. (202-160)



கரவெட்டி மாணிக்கவாசகர் வித்தியாலய தரம் ஒன்று மாணவர்களின் கால்கோள் விழா அண்மையில் இடம்பெற்றது. நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட மக்கள் வங்கி நெல்லியடிக் கிளை முகாமையாளர் சி.சிவஞானசுந்தரம் மாணவர் முதல்வர் ஒருவருக்கு சின்னம் சூட்டிக் கௌரவிப்பதையும் தரம் ஒன்று மாணவர்களையும் படங்களில் காணலாம். *(படங்கள் : சுந்தா)*

# சிறுவர்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண்பதற்கு வைத்திய அதிகாரிகளுடன் மாநாடு நடத்தப்படவேண்டும்

## மாவட்டக் குழுக் கூட்டத்தில் பரிந்துரை

யாழ்ப்பாணம்,மார்ச்8

பாதிக்கப்படும் சிறுவர் தொடர்பாக நீடித்த, நிலையான தீர்வு காணப்பட வேண்டும். இதற்கென மாநாடுகள் மற்றும் கலந்துரையாடல்கள் வைத்திய அதிகாரிகளுடன் இணைந்து நடத்தப்படவேண்டும்.

இவ்வாறு அண்மையில் யாழ்.செயலகத்தில் நடைபெற்ற மாவட்டச் சிறுவர் அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் வலியுறுத்தப்பட்டது.

யாழ்.அரச அதிபர் கே.கணேஷ் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் பல்வேறு திணைக்கள அதிகாரிகளும் கலந்துகொண்டு சிறுவர் அபிவிருத்தி தொடர்பானக் கருத்துகளை முன்வைத்தனர்.

அரச அதிபர் தனது தலைமையுரையில், சிறுவர் தொடர்பான விடயங்கள் இன்று உலகளாவிய ரீதியில் முக்கியத்துவம் வாய்ந்தன. சிறுவர் அபிவிருத்திக்குழு அங்கத்தவர்கள் இவ்விடயத்தில் கூடிய கவனம் செலுத்த வேண்டும் எனத் தெரிவித்தார்.

களநிலைப் பணியாளர்களான சிறுவர் உரிமை மேம்பாட்டு அலுவலர்கள், நிகழ்ச்சித்திட்ட உதவியாளர்கள் (நன்னடத்தை) மற்றும் நன்னடத்தை அலுவலர்களின் பணிகள் மக்களால் உற்றுநோக்கப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டதோடு அவர்கள் தமது கடமையிலிருந்து வழுவ இயலாது என்பதையும் அறிவுறுத்தினார்.

பாதிக்கப்படும் சிறுவர் தொடர்பாக நீடித்த, நிலையான தீர்வைக் காண்பதற்கான சம்பவ மாநாடுகள் வைத்திய அதிகாரிகளுடன் இணைந்து மேற்கொள்ளப்படவேண்டும் எனச் சுட்டிக்காட்டிய பிராந்திய மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன், அண்மித்த வைத்தியசாலைகளில் இத்தகைய கூட்டங்கள் நடத்த ஒழுங்கு செய்வதாகத் தெரிவித்தார்.

ஒவ்வொரு பிள்ளையினதும் பிறப்பு பதியப்படவேண்டும் எனத் தெரிவித்த அரச அதிபர் அத்தோடு பிறப்பு பதிவுகளில் ஏற்படும் பிரச்சினைகளை நீக்குவதற்குப் பிரதேச செயலர்கள் தனிப்பட்ட கவனம் செலுத்திப் பிள்ளைகளின் எதிர்கால நலன் பாதிக்கப்படாத வகையில் ஏற்ற ஒழுங்கு செய்யுமாறு கேட்கப்பட்டது. நடமாடும் சேவை மூலம் பிறப்பத்தாட்சிப் பத்திரம் வழங்க எடுக்கப்பட்ட நடவடிக்கையை தொடருமாறும் கேட்டுக்கொள்ளப்பட்டது.

கட்டாயக் கல்விக் குழுக்களின் செயற்பாடு தொடர்பாக வலயக் கல்விப்பணிப்பாளர்கள் கூடிய கவனம் செலுத்தவேண் டும் எனக் கோரப்பட்டது. கிராம மட்டக் குழுவின் செயற்பாட்டில் பின்தங்கிய கிராமங்களை தேர்ந்தெடுத்து மாதிரிக் கிராமங்களாக அபிவிருத்திப் பாதையில் இட்டுச்செல்ல நடவடிக்கை எடுக்குமாறும் கேட்கப்பட்டது.

மந்த புத்தியுள்ள சிறுவர்கள், மெல்லக் கற்போர் என்கின்ற விடயங்கள் தொடர்பாக கல்வித்திணைக்களம் கவனம் செலுத்த வேண்டியதன் அவசியம் குறித்து வைத்திய கலாநிதி சா.சிவயோகனால் முன்வைக்கப் பட்டது. (202)

# கிராம மட்ட சுகாதாரத்தை வளப்படுத்த வலி.மேற்கில் மேம்பாட்டுக் குழுக்கள்

சங்கானை,மார்ச்.8


கிராம மட்டத்தில் சுற்றாடல் சுகாதாரத்தைப் பேணும் பொருட்டு வலிகாமம் மேற்கு பிரதேச செயலர் பிரிவில் சுகாதார மேம்பாட்டுக் குழுக்கள் தெரிவுசெய்யப்பட்டுள்ளன.

சங்கானை தெற்கு (ஜே/80) கிராம சேவையாளர் பிரிவுக்கான குழுத்தெரிவுக் கூட்டம் அண்மையில் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் க.சதீஸ் தலைமையில் சங்கானை சிவப்பிரகாச மகாவித்தியாலயத்தில் நடைபெற்றது. இம்மேம்பாட்டுக் குழுக்கள் முன்னெடுக்கப்பட வேண்டிய சுகாதார நடவடிக்கைகள் குறித்துப் பரிசோதகரால் விளக்கிக் கூறப்பட்டது.

தொற்றுநோய் பரம்பல் கட்டுப்பாடு, நுளம்புக் கட்டுப்பாடு, திண்மக் கழிவு முகாமைத்துவம், கழிவுநீர் முகாமைத்துவம், மழைநீர் சேமிப்பு, விலங்கு விசர்நோய் கட்டுப்பாடு, பாதுகாப்பான குடிதண்ணீர் வழங்கல், மலசலகூடம் அமைத்தல், நலன்புரி நிலையங்களில் சுகாதார மேம்பாடு, பாதீனியம் கட்டுப்பாடு,

சூழல் மாசடைதலைக் கட்டுப்படுத்தல், மயானங்களின் பராமரிப்பு, ஒலிக் கட்டுப்பாடு, கொல்களம், பொதுச் சந்தையின் சுகாதாரம், சட்டவிரோத மது விற்பனை/மதுபாவனைக் கட்டுப்பாடு, அனர்த்த முகாமைத்துவத்தைத் தயார் செய்தல், சட்ட விரோதமாக விலங்கறுப்பு, சட்ட விரோதமாக மண் அகழ்வு போன்றவை குறித்து குழுக்கள் முகம்கொடுக்க வேண்டிய நடவடிக்கைகள், பொதுமக்கள் வழங்க வேண்டிய ஒத்துழைப்பு என்பவை குறித்து சுகாதாரப் பரிசோதகர் விளக்கமளித்தார். (202-29)

## 31ஆம் நாள் நினைவுகூரலும் வீட்டுக் கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்



பிறப்பு 13 ★ 07 ★ 1948

இறப்பு 07 ★ 02 ★ 2008

கடந்த (07.02.2008) வியாழக்கிழமை அமரத்துவமடைந்த
எமது குலவிளக்கு

### அமரர் கோவிந்தபிள்ளை புவனேஸ்வரன்

[யா/ சாவகச்சேரி இந்துக்கல்லூரி]

அவர்களின் வீட்டுக்கிருத்தியமும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் இன்று (08.03.2008) சனிக்கிழமை மு.ப. 11 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் இடம்பெறும். அத்தருணம் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் வருகைதந்து அவரின் ஆத்மசாந்திப் பிரர்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

அன்னார் நோய்வாய்ப்பட்டிருந்தபோது அவருக்கு சிகிச்சையளித்த வைத்திய கலாநிதிகள், தாதிமார்கள் மற்றும் உதவியாளர்கள் ஆயியோருக்கும் நேரிலும், தொலைபேசி மூலமும், தந்திமூலமும் ஆறுதல்கூறிய உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவருக்கும் யா/ சாவகச்சேரி இந்துக் கல்லூரிச் சமூகத்தினருக்கும், இறுதிச்சடங்கில் கலந்து பலவழிகளிலும் உதவியவர்களுக்கும், அஞ்சலிப் பிரசுரங்கள், மலர்வளையங்கள் மூலம் அஞ்சலி செலுத்திய அனைவருக்கும், இறுதி ஊர்வலத்தில் கலந்துகொண்ட அனைவருக்கும் எமது இதய பூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

தனிப்பட்ட அழைப்பிதழ் கிடைக்காதவர்கள் இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

*கல்லூரி ஒழுங்கை,*
*சங்கத்தானை,*
*சாவகச்சேரி.*

(சி/551737

குடும்பத்தினர்.


## இறைச்சிக்கோழி விற்பனை

புறொயிலர், கல்பேட் தினமும் சுத்தம் செய்து குறைந்த விலையில் பெற்றுக் கொள்ளலாம்.

நல்லூர் பாம் சென்ரர்

(71770) 19, முருகேசர் லேன், நல்லூர்.


## மகளிர் தின நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், மார்ச் 8

அரியாலை அபிவிருத்திச் சங்கம் நடத்தும் சர்வதேச மகளிர் தினவிழா எதிர்வரும் திங்கட்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு அரியாலை ஸ்ரீ பார்வதி வித்தியாசாலையில் நடைபெறவுள்ளது.

சிறுவர் கல்விக்கும் பால்நிலை அபிவிருத்திக்குமான நிறுவனத்தின் இயக்குநர் திருமதி பொன்மலர் இராஜேஸ்வரன் கலந்து கொள்வார். (202)

* * *

யாழ்ப்பாணம், மார்ச் 8

இளவாலை திருமறைக் கலாமன்றம் நடத்தும் மகளிர் தினவிழா இன்று சனிக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு புனித ஹென்றியரசர் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

கலாமன்ற மகளிரவைச் செயலாளர் செல்வி இ.யூட் குமுதினி தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்விற்குப் பிரதம விருந்தினராக யாழ்.மாவட்ட கூட்டுறவுச்சபை மகளிர் விவகார உத்தியோகத்தர் திருமதி வேதவல்லி செல்வரத்தினம் கலந்து கொள்வார். (202)

* * *

யாழ்ப்பாணம், மார்ச் 8

தேவை நாடும் மக்ளிர் அமைப்பு நடத்தும் மகளிர் தின நிகழ்வுகள் இன்று சனிக்கிழமை காலை 9 மணிக்கு வேம்படி மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளன.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக மல்லாகம் மாவட்ட நீதிபதி திருமதி சரோஜினி இளங்கோவன் கலந்துகொள்வார். (202)

## நவாலி வடக்கு கி.அ.பிரிவை இரண்டு பிரிவுகளாக்க நடவடிக்கை

யாழ்ப்பாணம்,மார்ச்8

நவாலி வடக்கு (ஜே/134) கிராம அலுவலர் பிரிவை குடும்பங்களின் எண்ணிக்கையைக் கருத்திற்கொண்டு இரண்டு பிரிவுகளாகப் பிரிக்கப்படவுள்ளது.

இதற்கான ஏற்பாடுகளை கிராம அலுவலர் அ.தனபாலரத்தினம் முன்னெடுத்துள்ளார்.

இக்கிராம அலுவலர் பிரிவில் 796 குடும்பங்கள் வாழ்கின்றன. இவற்றுக்கான செயற்பாடுகளை இலகுபடுத்தும் நோக்கில் இரண்டு பிரிவுகளாகப் பிரித்துச் செயற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை -

பிரான்பற்று, ஆனைக்கோட்டை ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளையும் பிரித்து செயற்படுத்துவதற்கான ஆரம்ப கட்ட நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (202-95)

## மெய்வன்மைப் போட்டி

யாழ்ப்பாணம், மார்ச் 8

கரணவாய் தாமோதரவித்தியாலய வருடாந்த இல்லமெய்வன்மைப் போட்டி இன்று சனிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

அதிபர் எஸ்.மகேஸ்வரராஜா தலைமையில் நடைபெறவுள்ள போட்டியிலே கரவெட்டி பிரதேச வைத்தியசாலை டாக் டர் எஸ்.யோகீஸ்வரதேவர் பிரதம விருந்தினராகவும், நெல்லியடி இலங்கை வங்கி முகாமையாளர் வி.தில்லைநாதன் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்வர். (202)


## COMPUTER EXPRESS

Institute of Information Technology
#15, Sirambiyadi Lane, Jaffna.021 222 8250
Branch : 167, Kasthuriyar Rd, Jaffna 0777222422

ஒருவாரகால முழுநேர கற்கைநெறிகள்

**Diploma in Hardware Engineering**
❖ Assembling ❖ Upgrading ❖ Troubleshooting ❖ Fault finding ❖ Repairing ❖ Servicing ❖ Software Installation ❖ Configuring ❖ Networking
Course Fee : 2000/=

**Diploma in Video Editing**
முன்னணி Video Mixing Software களூடாக
❖ Adobe Photoshop ❖ Adobe Premier ❖ Cool3D Studio ❖ Pinnacle Studio ❖ VCD Cutter ❖ Capturing
Course Fee : 3000/=

**Diploma in Graphic Designing**
❖ Adobe Photoshop ❖ Corel DRAW ❖ Cool3D Studio ❖ Micro Media Flash
Course Fee : 2000/=

**Diploma in Computerized Accounting**
ACCPAC + QuickBooks + MYOB ஆகிய முன்னணி Accounting Software களினூடாக கற்பிக்கப்படும்.
Course Fee : 3500/=

வகுப்புக்கள் ஆரம்பம் :10/03/2008 09.00AM


## அந்தியேட்டி அழைப்பும் நன்றிநவிலலும்



தோற்றம் 10 ★ 12 ★ 1962

மறைவு 07 ★ 02 ★ 2008

### அமரர் அம்பலவாணபிள்ளை பாமாவிஜயன்

*(தும்பளை, பருத்தித்துறை)*

கடந்த 07.02.2008 வியாழக்கிழமை சிவபதமடைந்த எமது அன்புத் தெய்வத்தின் இறுதிக்கிரியைகளில் கலந்து கொண்டோருக்கும் அனுதாபங்கள் தெரிவித்தவர்களுக்கும், பலவழிகளிலும் உதவிகள் புரிந்தோருக்கும் எமது உளப்பூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக் கொள்வதோடு, இன்று (08.03.2008) சனிக்கிழமை காலை 7 மணிக்கு தும்பளை முத்துமாரியம்மன் ஆலய அந்தியேட்டிமடத்தில் நடைபெறும் கிரியைகளிலும், எமது இல்லத்தில் நடைபெறும் கிரியைகளிலும், ஆத்மசாந்திப் பிரார்த்தனைகளிலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

*'இராதா இல்லம்'*
*தும்பளை கிழக்கு,*
*பருத்தித்துறை.*
*தொலைபேசி: 2263999* (சி/551595)

*உங்கள் பிரிவால் துயருறும்:*
திருமதி அ.பரமேஸ்வரி *(அம்மா)*யும்
குடும்பத்தினரும்.


## விமான சேவை

- யாழ். - கொழும்பு- யாழ். *(EXPO AIR TICKET)* எங்களிடம் பெற்றுக்கொள்ளலாம்.
- உங்கள் பொதிகள் (Parcel) கொழும்பு - யாழ். கொழும்பு தினசரி விமானமூலமாக உடனடியாக ஏற்றி இறக்கப்படும்.
- கிளியரன்ஸ் இல்லாத பொருள்களுக்கு M.O.D பெற்று உத்தரவாதத்துடன் ஏற்றி இறக்கப்படும்.
- உங்களுக்குத் தேவையான சகல விமானப்பொருள்கள் கொழும்பிலும் யாழிலும் இருந்து கொள்வனவு செய்து தரப்படும்.
- பூதவுடல்களும் விமானமூலமாக எடுத்துச் செல்வதற்கு வசதிகள் செய்து கொடுக்கப்படும்.
- அவசர தேவைகளுக்காகத் தனிவிமானம்/ ஹெலிக்ஹொப்டர் சேவைகள் ஒழுங்குசெய்து தரப்படும்.

(சி/551732)

**EURO FLIGHT AND CARGO (PVT) LTD**

* NO.35, STATION ROAD, MOUNTLAVINIA,
TEL.: 011 4542190, 077 2966901, 0772966906

* NO.11, VIHARA LANE, COLOMBO - 06
TEL.: 0114969116, 0772966907

* NO.22, WYMAN ROAD, NALLUR, JAFFNA.
TP: 021 222 3974, 0772966910/11


## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு



பிறப்பு 25.10.1935 இறப்பு 07.02.2008

கடந்த 07.02.2008
வியாழக்கிழமை சிவபதமடைந்த
எமது குடும்பத் தலைவர்

### அமரர் தம்பிராசா இராஜஇரத்தினம்

அவர்களின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று (08.03.2008) சனிக்கிழமை முற்பகல் 11 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறவுள்ளன. அத்தருணம் தாங்கள் வருகைதந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

*தஞ்சி ஒழுங்கை,*
*அரசடி வீதி,*
*யாழ்ப்பாணம்.*

*16/9, சீனியர் ஒழுங்கை,*
*கலட்டி, யாழ்ப்பாணம்.*

(71783)

திருமதி
இ.புஸ்பறோசாமணி
*(மனைவி)*

ஸ்ரீராம ஜெயம்

## ஆசார்யாபிஷேக அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் சர்வஜித் வருஷம் மாசி மாதம் 26ஆம் திகதி (09.03.2008) ஞாயிற்றுக்கிழமை உத்தரட்டாதி நட்சத்திரமும் வளர்துதியை திதியும் கூடிய பகல் 10.25-11.25 மணிவரையிலான இடபலக்கின சுபமுகூர்த்தத்தில், நவிண்டில் சக்களாவத்தை ஞானவைரவர் ஆலய ரெங்கசாமிக் குருக்களின் பௌத்திரனும் எமது சீமந்த புத்திரனுமாகிய

**பிரம்மஸ்ரீ ரெங்கசாமி சர்மா** *(கோபி)*

அவர்களுக்கு உடுப்பிட்டி மாத்தோட்டை சிவஞான வைரவர் திருவருளும், குருஅருளும் துணை நிற்க நவிண்டில் சக்களாவத்தை ஞானவைரவர் ஆலயத்தில்

**"சிவாச்சார்ய அபிஷேகம்"**

(குருப்பட்டம் வழங்கல்)

நிகழ்த்தப் பெரியோர்களால் நிச்சயிக்கப்பட்டுள்ளதால் அத்தருணம் தாங்கள் குடும்ப சமேதராக வருகைதந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

தீக்ஷாகுரு:
கிரியா வித்மத் ஜோதி, பண்டிதர்
பிரம்மஸ்ரீ கு.ஜெகதீஸ்வர சிவாச்சார்யார் *(மட்டுவில்)*

தங்கள் நல்வரவை நாடும்:

*ஸ்ரீ வைரவர் கோயில்,*
*சக்கலாவத்தை,*
*கரணவாய் வடக்கு, கரவெட்டி.*
*T.P: 0777-035271*

ஸ்ரீ.ஸ்ரீமதி ராதாகிருஷ்ணக்குருக்கள்
ஸ்ரீ.ஸ்ரீமதி மதுசூதனக்குருக்கள்
ஸ்ரீ.ஸ்ரீமதி ராஜசேகரசர்மா.

சுபம்

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

## ஜனநாயகக் குரலை ஒதுக்கி வந்தவர்கள் இப்போது அதை ஒழித்துக் கட்டுகின்றனர்

தமிழ் மக்களின் உள்ளக் கிடக்கையை தேசிய மட்டத்திலும், சர்வதேச மட்டத்திலும் வெளிப்படுத்தி வந்த மற்றொரு ஜனநாயகக் குரல், வன்முறை மூலம் அடக்கப்பட்டிருக்கின்றது.

'மஹிந்த சிந்தனை' தென்னிலங்கையின் ஆட்சி அதிகார சுலோகமாக - மந்திரமாக - மாறியபின்னர், நான்காவது தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர் படுகொலை செய்யப்பட்டிருக்கின்றார்.

முதலில் ஜோஸப் பரராஜசிங்கம். அடுத்து ரவிராஜ். பின்னர் மகேஸ்வரன். இப்போது சிவநேசன்.

தவிரவும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான சிவமகாராஜா, சந்திரநேரு, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் எம்.பி. பதவியை ஏற்கவிருந்த திருகோணமலையின் விக்னேஸ்வரன் போன்றோரும் இக்கால கட்டத்தில் படுகொலை செய்யப்பட்டிருக்கின்றார்கள்.

இலங்கைத் தீவின் நாடாளுமன்றத்தில் கடந்த பொதுத் தேர்தலின் பின்னர் ஆகக் கூடியதாக இலங்கைத் தமிழர்கள் 24 பேர் நாடாளுமன்றத்தில் இருந்தனர். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஓரிடமும், மகேஸ்வரன் எம்.பியின் ஓரிடமும் முஸ்லிம் உறுப்பினர்களுக்குப் போய்விட்டமையால் இலங்கைத் தமிழ் எம்.பிக்களின் எண்ணிக்கை இப்போது 22 ஆகக் குறைந்துவிட்டது.

ஆக, 24 தமிழ் எம்.பிக்களில் நால்வரை - அதாவது தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களில் ஆறில் ஒரு பகுதியினரை - 'மஹிந்த சிந்தனை' யின் நிர்வாகத்தின் கீழ் தமிழர் தரப்பு இழந்து நிற்கின்றது.

நாடாளுமன்றில் அங்கம் வகிக்கும் 24 இலங்கைத் தமிழர் தரப்பு எம்.பிக்களில் 22 பேர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர்.

இலங்கையின் தேசிய இனப்பிரச்சினையின் பிரதான தரப்புகளுள் ஒன்று தமிழர் தரப்பு.

அவர்களின் தேசிய இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கான நடவடிக்கை என்ற பெயரில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தமது 'மஹிந்த சிந்தனை'யின் கீழ் நிறுவிய நாடாளுமன்றில் அங்கம் வகிக்கும் கட்சிகளைக் கொண்ட சர்வகட்சிப் பிரதிநிதிகள் தெரிவுக்குழுவில் இந்த 22 பேரைக் கொண்ட தமிழர் தரப்பு முற்றாக ஒதுக்கப்பட்டது. அந்தத் தரப்பை - மொத்தம் உள்ள இலங்கைத் தமிழ் எம்.பிக்கள் 24 பேரில் 22 பேரை - ஒட்டுமொத்தமாக ஒதுக்கி வைத்துவிட்டுத்தான் நாடாளுமன்றக் கூட்டமைப்பு மூலம் இலங்கைத் தேசியப் பிரச்சினைக்குத் தீர்வு காணும் எத்தனம் என்ற நாடகத்தை அவர் ஒப்பேற்றுகின்றார்.

இனப்பிரச்சினைத் தீர்வுக்கான முயற்சியில் தமிழரின் ஜனநாயகப் பிரதிநிதிகளின் கருத்தைக் கேட்பதற்குத் தயாரில்லாமல் அவர்களை ஒதுக்கி வந்த தென்னிலங்கை, இப்போது அவர்களை ஒழித்துக் கட்டுவதையும் தனது 'சிந்தனை'யில் சேர்த்துக்கொண்டு விட்டது போலும். வரிசையாக இடம்பெறும் தமிழ் எம்.பிக்களின் படுகொலைகள் அத்தகைய எண்ணத்தையே தோற்றுவிக்கின்றன.

ஆள்கடத்தல்கள், பலவந்தமாகக் கடத்திக் காணாமற் போகச் செய்தல், குறிவைத்துப் படுகொலை செய்தல் போன்ற கொடூரங்கள் இலங்கையில் மிக மோசமடைந்திருக்கும் சமயத்தில் -

மனித உரிமைகளைப் பேணுவது தொடர்பில் இலங்கையின் சீரழிவு நிலை குறித்தும் தற்போது ஜெனிவாவில் இடம்பெறும் ஐ.நா.மனித உரிமைகள் கவுன்ஸிலின் ஏழாவது கூட்டத் தொடரில் விரிவாக ஆராயப்பட்டு வருகையில் -

ஆள்கடத்தல், பலவந்தமாகக் காணாமற்போகச் செய்தல் போன்ற மனித உரிமை மீறல்களுக்கு அரசும், அரசுப் படைகளும், அரச ஆதரவுடன் இயங்கும் ஆயுதக் குழுக்களுமே பிரதான காரணம் என்று பல்வேறு சர்வதேச மனித உரிமை அமைப்புகளும் கண்டனமும் அதிருப்தியும் வெளியிட்டு வரும் சூழ்நிலையில் -

மோசமான மனித உரிமை மீறல்கள் குறித்து நீதியான விசாரணை நடத்தப்படுகின்றது என்று உலகுக்குக் காட்டுவதற்காக அரசு நியமித்த ஜனாதிபதி ஆணைக்குழு, காத்திரமாக எதையுமே செய்யவில்லை என்ற உண்மையை சர்வதேச - சுயாதீன - பிரமுகர்களைக் கொண்ட கண்காணிப்பு அணி அப்பட்டமாகப் போட்டுடைத்து அறிவித்துள்ள பின்னணியில் -

தமிழர் தரப்பின் ஜனநாயகப் பிரதிநிதி ஒருவரைக் கொன்றொழிக்கும் அட்டூழியமும் அரங்கேறி, இந்த ஆட்சி அதிகாரத்தின் நியாயச் செயற்பாட்டுப் போக்கை சர்வதேச அரங்கில் சந்தி சிரிக்க வைத்திருக்கின்றது.

இலங்கையில் தற்போது தொடர்ந்தும் கட்டுமட்டில்லாமல் பெருங் கொடூரமாக நீண்டுவரும் மிக மோசமான மனித உரிமை மீறல் சம்பவங்களும் -

அவற்றைக் கட்டுப்படுத்தவோ, அக்குற்றங்களுக்குப் பொறுப்பானவர்களைக் கைது செய்து சட்டத்தின் முன் நிறுத்தவோ இசைவின்றி - அதற்குக் காத்திரமான நடவடிக்கை எடுக்காமல் வாளாவிருந்தபடி - அத்தகைய மோசமான செயல்களுக்கும் அரசுத் தரப்புக்கும் எந்தத் தொடர்புமேயில்லை என்று வெறும் வாய்ப்பேச்சு அறிவிப்புகளை அரசு விடுத்து வருவதும் -

இவ்விவகாரங்களை ஒட்டி சர்வதேச மட்டத்திலும், தேசிய மட்டத்திலும் வெளியாகும் அறிவிப்புகள், அறிக்கைகளும் -

இலங்கையில் இடம்பெறும் மனித உரிமை மீறல்கள் குறித்து விசாரித்து, உண்மைகளைக் கண்டறிந்து, அறிக்கையிடக்கூடிய அதிகாரத்துடன் இங்கு சுயாதீனமான - சுதந்திரமான - சர்வதேசக் கண்காணிப்புக் குழு ஒன்று இருப்பது கட்டாயம் அவசியம் - என்பதையே எமக்கு வெளிப்படுத்தி நிற்கின்றன.

## மாகாண மட்டத் தமிழ்த்தினப் போட்டிகளை அந்தந்த மாவட்டத்திலேயே நடத்த ஏற்பாடு

யாழ்ப்பாணம்,மார்ச்.8

கடந்த வருடத்துக்கான தமிழ்த்தினப் போட்டிகளில் மாவட்ட மட்டப் போட்டிகளை அந்தந்த மாவட்டங்களிலேயே எதிர்வரும் 15ஆம் திகதி நடத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

வவுனியாவில இந்தப் போட்டிகளை நடத்த ஏற்பாடுகளை மேற்கொள்ளப்பட்டிருந்தன. எனினும் மதவாச்சியில் உள்ள போக்குவரத்துத் தடையையைக் கருத்தில் கொண்டு குழுப் போட்டிகளை அந்தந்த மாவட்டங்களில் நடத்தி அவற்றை வீடியோ மூலம் பதிவு செய்து வெற்றிபெறுவோரைத் தெரிவு செய்வது என்று முடிவுசெய்யப்பட்டுள்ளது.

இதன்படி எதிர்வரும் 15ஆம் திகதி தொடக்கம் அந்தந்த மாவட்டங்களிலேயே குழுப் போட்டிகளை நடத்துவது எனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

எழுத்துப் பரீட்சைகளை அந்தந்த மாவட்டங்களிலேயே நடத்துவது என ஏற்கனவே முடிவு செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

யாழ்.மாவட்டத்திலும் குழு நிலை, தனிநபர் கலைப் போட்டிகள் எதிர்வரும் 15ஆம் திகதி நடத்தப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை -

தமிழ் அறிவு வினா விடைப் போட்டியும் விவாதப் போட்டியும் போட்டியாளர்களால் நேருக்கு நேர் நடத்தப்பட வேண்டும் என்பதால் இவை இரண்டையும் வவுனியாவில் நடத்துவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (202-207-111-302)

## முதலாம் தவணை முடியும் நிலையில் பாடசாலைகளுக்கு தரம் 7, தரம் 11 இற்கான பாடநூல்கள் வந்து சேர்ந்தன

யாழ்ப்பாணம்,மார்ச்.8

குடாநாட்டுப் பாடசாலைகளுக்கு முதலாம் தவணை முடியும் நிலையில் தரம் 7, தரம் 11 மாணவர்களுக்கான புதிய பாடத் திட்டப் பாடநூல்கள் வந்துசேர்ந்துள்ளன.

இந்தப் பாடநூல்கள் வந்து சேரவில்லை என பல தரப்புக்களில் இருந்து கோரிக்கைகள் விடுக்கப்பட்டு வந்தன.

யாழ். செயலகத்தில் நடந்த அத்தியாவசிய சேவைகள் தொடர்பான கூட்டத்திலும் மாகாண சபையில் நடந்த வலயக் கல்விப் பணிப்பாளர்கள் கூட்டத்திலும் இது தொடர்பாகச் சுட்டிக் காட்டப்பட்டிருந்தது.

இந்நிலையில தற்சமயம் கப்பல் மூலமாக அந்தப் பாட நூல்கள் எடுத்து வரப்பட்டுள்ளன என கல்வித் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன. அத்துடன் ஏனைய வகுப்புக்களுக்கான பாட நூல்களும் எடுத்து வரப்பட்டுள்ளன.

இந்தப் பாட நூல்கள் தற்போது களஞ்சியப்படுத்தப்பட்டுள்ளன. எனவும் - கோட்ட ரீதியாக அவற்றை உடன் பங்கீடு செய்து வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும் திணைக்களத்தினர் தெரிவித்தனர்.

(202-11-111-302-207)

## செயற்குழுக் கூட்டம்

யாழ்ப்பாணம்,மார்ச்.8

யாழ்.மாவட்ட கலை, கலாசாரப் பேரவையின் செயற்குழுக்கூட்டம் இன்று சனிக்கிழமை முற்பகல் 11 மணிக்கு மாவட்ட செயலகத்தில் நடைபெறவுள்ளது. (202)

## விளையாட்டு நிகழ்வுகள்

வலி.வடக்கு, மார்ச்.6

உடுவில் வைகறை விளையாட்டுக் கழகம் யாழ். மாவட்ட தாச்சிச் சங்கத்தின் அணுசரணையுடன் நடத்தி வரும் விலகல் முறையிலான தாச்சி சுற்றுப் போட்டியில் இன்று பிற்பகல் 4மணிக்கு வைகறை விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம் பெறவுள்ள ஆட்டத்தில் இணுவில் அறிஞர் விளையாட்டுக் கழகமும், அளவெட்டி கலைவாணி விளையாட்டுக் கழகமும் மோதுகின்றன. (1-86)

* * *

பருத்தித்துறை,மார்ச்6

கரணவாய் தாமோதர வித்தியாலய வருடாந்த இல்லமெய்வன்மைப் போட்டி இன்று சனிக்கிழமை வித்தியாலய விளையாட்டு மைதானத்தில் நடைபெறுகின்றது.

வித்தியாலய அதிபர் எஸ்.மகேஸ்வரராஜா தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் கரவெட்டி பிரதேச வைத்தியசாலை டாக்டர் எஸ். யோகீஸ்வரதேவர் பிரதம விருந்தினராகவும் இலங்கை வங்கியின் நெல்லியடி கிளை முகாமையாளர் வல்லிபுரம் தில்லைநாதன் சிறப்பு விருந்தினராகவும் கலந்துகொள்கின்றனர். (1-218-70)

* * *

யாழ்ப்பாணம், மார்ச்.8

கோப்பாய் தெற்கு றே.க.த.க பாடசாலையின் இல்ல மெய்வன்மை போட்டி நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு நடைபெற உள்ளது.

பாடசாலை அதிபர் ச.லலீசன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கோட்டக் கல்விப்பணிப்பாளர் வி.எஸ்.சித்திரவடிவேல் கலந்துகொள்வார்.(1-202)

### நாளை

| | |
|---|---|
| மாசி - 26 | 09.03.2008 |
| | ஞாயிற்றுக்கிழமை |
| திதி: துதியை | மு.இ. 08.13 வரை |
| நட்சத்திரம் : | உத்தரட்டாதி |
| | பி.ப. 03.26 வரை |
| சுபநேரம் : | 09.23 - 10.53 |
| ராகுகாலம் : | 04.53 - 06.23 |

## பிரான்ஸின் உள்ளூராட்சி சபைத் தேர்தலில் 11 பெண்கள் உட்பட 17 தமிழர் போட்டி

பரிஸ்,மார்ச்.8

பிரான்ஸில் இவ்வாண்டுக்கென நடைபெறவுள்ள உள்ளூராட்சி சபைத் தேர்தலில் 14 நகர சபைகளில் தமிழர்கள் போட்டியிடவுள்ளனர். 11 பெண்கள் உட்பட 17 பேர் இதற்கென வேட்பு மனுக்களைத் தாக்கல் செய்துள்ளனர்.

தமிழர்கள் போட்டியிடவுள்ள நகர சபைகளும் அவர்களின் பெயர் விவரங்களும் வருமாறு:-

ஆர்ஜோன்தோய் - டொமினிக் இலங்கநாதன், லூவர் - திருமதி வேர்ஜினி சபாரட்ணம், குசான்வீல் - செல்வி ரம்ஜா ஜெயமோகன், வில்லியே லூபெல் - திருமதி தங்கா பாஸ்கரன், சார்சேல் - செல்வி சூசைப்பிள்ளை சன்டிறின் சோபியா, கார்ஜலேஸ் கொனேஸஸ் - கரிப்பிரசாத் பாலசுந்தரம், லாகுர்நோவ் - புவனேந்திரன், செல்வி சரணியா, செல்வி மதுரா,

ஒலுனே சூஸ்போய்ஸ் - செல்வி தட்சாயினி தேவராஜா, கிளிச்சி சூஸ் போய்ஸ் - திருமதி நகுலேஸ்வரி அரியரட்ணம், பொன்டி - திருமதி லீலாவதி இராஜேந்திரம், பரிஸ் 18 - கிருபாகரன், செல்லெஸ் - திருமதி வில்லியம் றெஜினோட் அசந்தா, எவ்றிகுக் றேன்ஸ் - திருமதி பிரிதி நவநீதராயு, வில்நெவ் சென்ஜோர்ஜ் - ரவீந்திரநாத் கலையரசி.

61 தமிழ்ச் சங்கங்கள் மற்றும் தமிழ் அமைப்புகள் ஒன்றிணைந்த பிரான்ஸ் தமிழ்ச்சங்கங்களின் கூட்டமைப்பு இத் தமிழர்களின் வெற்றிக்கான பிரசார நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளது. (202)

## மலேஷியாவில் ஆளும் கூட்டணிக்கு 9 இடங்களில் போட்டியின்றி வெற்றி

### இன்று பொதுத் தேர்தல்

கோலாலம்பூர்,மார்ச்8

மலேஷிய ஆளும் கூட்டணிக்கு ஒன்பது இடங்களில் போட்டியின்றி வெற்றி கிடைத்துள்ளது.

மலேஷிய நாடாளுமன்றத்துக்கும், மாநில சட்டசபைகளுக்கும் இன்று சனிக்கிழமை தேர்தல் நடக்கிறது. இப்போதைய நாடாளுமன்றத்துக்கு அடுத்த ஆண்டு மே மாதம் வரை ஆயுள் இருந்தபோதிலும், அதனை பிரதமர் படாவி கலைத்து விட்டு தேர்தலல் நடத்த உத்தரவிட்டார்.

நாடாளுமன்றத்தின் 222 தொகுதிகளுக்கும் மாநில சட்ட சபைகளின் 505 தொகுதிகளுக்கும் தேர்தல் நடக்கிறது. இந்தத் தேர்தலில் ஒருகோடியே 9 லட்சத்து 22 ஆயிரத்து 139 பேர் வாக்களிக்கத் தகுதி பெற்றவர்கள் ஆவார்கள். வேட்பு மனுத் தாக்கல் செய்வதற்கு இறுதி நாள் முடிந்தபோது 9 தொகுதிகளில் ஆளும் கட்சி வேட்பாளர்களை எதிர்த்து போட்டியிட யாரும் வேட்பு மனு செய்யாததால் அவர்கள் போட்டியின்றி வெற்றிபெற்றனர்.

## சமையல் எரிவாயுக்களை குறைந்த விலையில் விநியோகிக்க இலங்கை பெற்றோலியம் கூட்டுத்தாபனம் நடவடிக்கை

யாழ்ப்பாணம்,மார்ச்8

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் சமையல் எரிவாயுக்களை குறைந்த விலையில் குடாநாட்டில் விநியோகிப்பதற்கான ஏற்பாடுகளை மேற் கொண்டு வருகின்றது என்று கூட்டுத்தாபன வட்டாரங்கள் தெரிவித்தன.

சமையல் எரிவாயு சிலிண்டர்களை ஜூன் மாதத்தில் இருந்து பாவனையாளர்களுக்குக் குறைந்த விலை யில் விநியோகிப்பதற்கான பூர்வாங்க ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக கூட்டுத்தாபனம் தெரிவித்துள்ளது.

சமையல் எரிவாயுக்களை விநியோகிப்பதற்கு முன் ஏற்பாடாக கூட்டுத்தாபனம் வெற்று சிலிண்டர்களை மொத்தமாகக் கோரியிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

இந்த சமையல் எரிவாயு சிலிண்டர்களைத் தனியார் ஊடாகவா அல்லது எரிபொருள் விற்பனை நிலையங்கள் ஊடாகவா நுகர்வோருக்கு விநியோகிப்பது என்பது குறித்து எதுவும் தெரியவரவில்லை. (202-224)

## ஸ்கந்தா-மகாஜன பழைய மாணவர்களின் நண்பர்கள் துடுப்பாட்டம் நாளை

வலி.வடக்கு, மார்ச்.8

வலிகாமத்தில் வருடா வருடம் இடம்பெறும் நண்பர்கள் துடுப்பாட்டம் நாளை ஞாயிற்றுக்கிழமை சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

ஸ்கந்தவரோதயக் கல்லூரி, மகாஜனக் கல்லூரி ஆகியவற்றின் பழைய மாணவர்கள் அணிகள் இந்த துடுப்பாட்டத்தில் மோதுகின்றன.

50 ஓவர்களைக் கொண்ட இந்தத் துடுப்பாட்டம் நான்காவது ஆண்டாக இவ்வருடம் இடம்பெறுகின்றது.


கடந்த மூன்று வருடங்களில் முதலாவது போட்டியில் மகாஜனக் கல்லூரியும் மற்றிரு போட்டிகளில் ஸ்கந்தவரோதயக் கல்லூரியும் வெற்றி பெற்றிருந்தன.

இவ்விரு கல்லூரிகளுக்கும் இடையில் இடம்பெறும் வீரர்களின் போர் துடுப்பாட்டத்தை தொடர்ந்து நண்பர்கள் துடுப்பாட்டம் இடம்பெறுகின்றது.

(1-68)

## 45ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

மண் மகிழ 22 . 02 . 1946



விண் நெகிழ 24 . 01 . 2008

**அமரர் சுப்பிரமணியம் நடேசபிள்ளை (J.P)**

கடந்த 24.01.2008ஆம் திகதியன்று சிவபதம் அடைந்த எமது குடும்பத் தலைவர் அவர்களின் வீட்டுக்கிருத்திய நிகழ்வு இன்று (08.03.2008) சனிக்கிழமை எமது இல்லத்தில் முற்பகல் 9 மணியளவில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளும் வண்ணம் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

''யோகபுரம்'', நாவற்காடு,
வரணி. (சி/551734) தகவல்: **குடும்பத்தினர்.**

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 27 - 09 - 1932



உதிர்வு '18 - 02 - 2007

**திருமதி செல்லையா முத்துப்பிள்ளை**

திதி:பிரதமை (08.03.2008)

ஆண்டொன்று போனது அம்மம்மா- உங்கள்
அன்பு முகம் எங்களைப் பிரிந்து
ஆனாலும் உங்கள் நினைவலைகள்
என்றும் எங்களை விட்டுப் பிரியாது அம்மம்மா
மார்மீதும் தோள்மீதும் சுமந்தே எங்களை
மகிழ்வோடு வளர்த்தீரே அம்மம்மாவே!
பார்மீது கடைசியிலும் நின் முகம் காணாமல்
பதறுகின்றோம் எங்கள் சோகம் நீங்காது அம்மம்மா
ஊர்விட்டு ஊர்நின்று உணர்வு பொங்க
உருகி அழுகின்றோமே அம்மம்மாவே
நீ தந்த அன்பு பாசம் நீங்காதம்மம்மா
நிலமீது உங்கள் புகழ் வாழும் வாழி!
அம்மம்மா இந்த உலகத்தில் வாழ்ந்தது போதுமொன்றோ
வானகம் சென்றீர்கள் அம்மம்மா.
அம்மம்மா உங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல
பிள்ளையாரப்பாவையும், கண்ணனைப்பாவையும்
பாதாரவிந்தங்களை வேண்டி வணங்குகின்றோம்.

4ஆம் குறுக்குத் தெரு,
கச்சாய் வீதி,
சாவகச்சேரி. (சி/551728) அன்புப் பேரன்கள்: **சிவா, அசோகன்.**

## மரண அறிவித்தல்

### முருகேசு தற்பரசுந்தரம்

(இளைப்பாறிய லிகிதர்)

அச்சுவேலியைப் பிறப்பிடமாகவும் சாவகச்சேரி, சங்கத்தானை, சப்பச்சிமாவடியை வசிப்பிடமாகவும் கொண்ட முருகேசு தற்பரசுந்தரம் 04.03.2008 இறைபதம் எய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முருகேசு- முத்தாச்சி தம்பதியரின் கனிஷ்ட புதல்வனும் காலஞ்சென்றவர்களான வல்லிபுரம்-வள்ளிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும் தையல்நாயகத்தின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற ஜெகதீஸ்வரி, ஜெகதாம்பாள், நிர்மலா, காலஞ்சென்ற மனோகரன், ஜெகதீஸ்வரன் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தந்தையும் காயத்திரி (ஜேர்மனி) அவர்களின் அன்பு மாமனும் அனந்தினி மணிவண்ணன், விதுஷன், கிசோபன், திஷபன் ஆகியோரின் அன்புப் பேரனும் காலஞ்சென்றவர்களான சிவஞானசுந்தரம், பாலசுந்தரம், மகேஸ்வரி, ராஜேஸ்வரி, சண்முகசுந்தரம், ஆகியோரின் அன்புச் சகோதரனும் அமரர் தாமோதரம்பிள்ளை கந்தையா (திருக்கேதீஸ்வரம்- ஆஸ்திரேலியா), அமரர்களான கணேசு, பொன்னம்பலம் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 04.03.2008 அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் அல்லாரை கொற்புலவு இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சப்பச்சி மாவடி,
சங்கத்தானை,
சாவகச்சேரி. (71791) தகவல்: **குடும்பத்தினர்.**

## சமய போட்டிகளில் வெற்றி பெற்றோர் விவரம்

யாழ்ப்பாணம்,மார்ச்8

வண்ணை சாந்தையர்மடம் ஸ்ரீ கற்பக விநாயகர் கோயில் சைவ சமய அபிவிருத்திக் கழகம் நடத்திய போட்டிகளில் வெற்றி பெற்றவர்களின் விவரங்கள் வெளியிடப்பட்டுள்ளன.

செயல்முறைப் போட்டிகளில் முதல் மூன்று இடங்களைப் பெற்றவர்களின் விவரம் வருமாறு:

**கோலம் போடுதல்:**

மத்திய பிரிவு

கி.காயத்திரி (யாழ்.இந்து மகளிர் கல்லூரி), ப.நிலானி (வண்.நாவலர் மகா வித்தியாலயம்), க.சாரங்கி(யாழ்.இந்து மகளிர் கல்லூரி).

மேற்பிரிவு

கோ.நிவாஸினி(நாவலர் வீதி, யாழ்ப்பாணம்), கா.ரூபாஜினி (சங்கிலியன் வீதி, நல்லூர்), பா.மயூரதி (வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை).

**மாலை கட்டுதல்**

மத்திய பிரிவு

கு.வித்தியாதரன் (கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம்), சி.லோஜன் (இணுவில் இந்துக் கல்லூரி), து.பிரதீப் (இணுவில் இந்துக் கல்லூரி).

மேற்பிரிவு

வி.ஞானபாலன் (பெரியபுலம் மகா வித்தியாலயம்), த.தயாழினி (உரும்பிராய் இந்துக் கல்லூரி), ஜெ.ஜெகதீபா (இணுவில் இந்துக் கல்லூரி).

**தோரணம் பின்னுதல் போட்டி**

மத்திய பிரிவு

ஸ்ரீ.சிந்துஜா (யாழ்.இந்துக் மகளிர் கல்லூரி), ச.சாம்பவி (யாழ்.இந்து மகளிர் கல்லூரி), த.ஜெனீஸ் (இணுவில் இந்துக் கல்லூரி).

மேற்பரிவு

ப.கபில்தாஸ் (உரும்பிராய் இந்துக் கல்லூரி), ந.கஷானா (பெரியபுலம் மகா வித்தியாலயம்), ஜெ.அமிலா (தெல்லிப்பழை துர்க்காபுரம் மகளிர் இல்லம்), இ.ஜெயாளன் (மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை).

**சைவசமய பரீட்சை முடிவுகள்**

தரம்-1

ஜெ.சங்கீர்த்தனா (யாழ்.இந்து மகளிர் ஆரம்ப பாடசாலை), ஜீ.தாட்சாயினி, (யாழ். இந்து மகளிர் ஆரம்ப பாடசாலை), தி.விதுஷிகா (யாழ்.இந்து மகளிர் ஆரம்ப பாடசாலை),

தரம்-2

ந.கிருத்திகா (யாழ்.இந்து ஆரம்ப பாடசாலை), ம.துஷாரா (தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரி), ர.நிலக்ஷிகா (சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி),

தரம்-3

க.தேவந்தி (யாழ்.இந்து ஆரம்ப பாடசாலை), த.நீலலோகன் (புனித ஜோன் பொஸ்கோ வித்தியாலயம்), பா.கஜானி (புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்த கல்லூரி), இ.தக்ஷாயினி (யாழ்.இந்து ஆரம்ப பாடசாலை).

தரம்-4

க.றஜிவன் ( கோண்டாவில் இந்து மகா வித்தியாலயம்), ப.மிஜாந் ( கோப் பாய் நாவலர் தமிழ் வித்தியாலயம்), மு.கோகுலன் (ஆனைப்பந்தி மெதடிஸ் மிஷன் வித்தியாலயம்), செ.துஷ்யந்தி (யாழ்.இந்து ஆரம்ப பாடசாலை). (தொடரும்)


## வீடு விற்பனைக்கு

கொக்குவில் சந்திக்கு அண்மையில் 3 பரப்புக் காணியில் அமைந்துள்ள வீடு விற்பனைக் குண்டு. பார்வையிடும் நேரம் 3 மணிக்குப் பின்.

தொடர்பு: 67, கே.கே.எஸ். வீதி, கொக்குவில். (71798)

## கணித வகுப்புகள்

தரம்9 தொடக்கம் தரம்11 வரையிலான மாணவர்களுக்கு பிரத்தியேகமான கணித வகுப்புகள் நடைபெறுகின்றன.

★ வீட்டிற்கும் வந்து கற்பிக்கப்படும்.

தொடர்பு: இல.126, சப்பின் வீதி, யாழ்ப்பாணம்
(71796) T.P.: 222-6047, 0771106355

## விற்பனைக்கு

பாலை நிராந்தி 4''x 2''- 10',11', 12' மொத்தம் 1000', ஊசிக்கால் சீற் கூரைக்கு உரியது இரும்பு, 20' சென்ரர்- 4 றஸ்ற், 33' சென்ரர்-3 றஸ்ற் என்பன விற்பனைக்குண்டு.

தொடர்பு: தி.கிருஷ்ணராஜா
190, சிவப்பண்ணை வீதி. யாழ்ப்பாணம். (71793)


## ஐந்தாம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர் தம்பு
**செல்லத்துரை**



மலர்வு: 03.05.1930

உதிர்வு: 04.03.2003

திதி: பிரதமை

உயிர் தந்து உணவு தந்து ஆயிரம் உறவுகளை அன்புடன் தாங்கி
உத்தமராய் வாழ்ந்த அப்பாவே!
இடைநடுவில் எமைத் தவிக்கவிட்டு அவசரமாய்ச் சென்றதேனோ?
ஐந்தாண்டுகள் என்ன ஐந்துயுகங்கள் கடந்தாலும் ஆறுமா உங்கள் பிரிவு?
உங்கள் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

''செல்வபதி'',
கைதடி வடக்கு,கைதடி. (71773) **குடும்பத்தினர்.**

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர்
திருவாசகமணி
**க.மாணிக்கவாசகர்**
(சுங்கத்திணைக்கள இளைப்பாறிய அதிகாரி)



தோற்றம்: 21.06.1920

மறைவு: 17.02.2007

''வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன்
வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்''

வாசம் குன்றா வாழ்வுடன், வழி எங்கும் ஒளியுடன்,
தேசம் எங்கும் புகழுடன், திரும்பும் இடமெல்லாம் நினைவுடன்,
வாழ்ந்து அழியாப் பிறப்பினில் ஆவல் கொண்டு,
ஆன்மாவாகிய சரீரம் நீங்கி, ஆண்டவன் நிழலில்
அமரத்துவமாகிய எங்கள் அன்புத் தெய்வத்திற்கு
பாதாரவிந்தங்களில் எம் கண்ணீர்ப் பூக்களால்
நினைவஞ்சலி செலுத்துகின்றோம். (71763)

இல.3, கலைப்புலவர் வீதி,
யாழ்ப்பாணம். **குடும்பத்தினர்.**

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

திருமதி
**கந்தையா சோதிப்பிள்ளை**



தோற்றம்: 01.07.1903

மறைவு: 05.02.2008

கடந்த 05.02.2008 செவ்வாய்க்கிழமை அன்று இறைவனடி சேர்ந்த எமது குடும்பத் தலைவியின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று (08.03.2008) சனிக்கிழமை முற்பகல் 11மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெறவுள்ளன. இந்நிகழ்வீலும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

கல்வளை,
சண்டிலிப்பாய். (71786) **குடும்பத்தினர்.**

## 16ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

சங்கீதபூஷணம்
அமரர்
யோகாம்பிகை
**திக்கம் செல்லையாபிள்ளை**
(ஆதீனகர்த்தா, கந்தவனக் கடவை, கல்யாண வேலவ சுவாமி கோயில், திக்கம் நீர்வளைப் பிள்ளையார் கோயில்)



தோற்றம்: 30.03.1932
மறைவு: 23.02.2008

23.02.2008 அன்று இறைபதமடைந்த செல்வி யோகாம்பிகை திக்கம் செல்லையாபிள்ளை அவர்களின் இறுதிக்கிரியைகளில் கலந்து கொண்டு அஞ்சலி செலுத்தியோருக்கும், தொலைபேசி மூலம் அனு தாபத்தைத் தெரிவித்தவர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

நாளை (09.03.2008) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெறும் அந்தியேட்டி நிகழ்விலும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து கந்தவனக்கடவை ஆலயமடத்தில் நடைபெறும் மதிய போசனத்திலும் பங்குபற்றுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

கந்தவனம்,
பொலிகண்டி. (71789) **குடும்பத்தினர்.**

"வீரர்களின் போர்" துடுப்பாட்டம்

# ஸ்கந்தா அணிக்கு : 9 - 246 மகாஜனா அணிக்கு : 4 - 49

## ஜெலன்ஸ் 86 ஓட்டங்களை விளாசினார்



வலி.வடக்கு,மார்ச் 8

'உதயன்' அனுசரணையுடன் நடைபெறும் 'வீரர்களின்போர்' துடுப்பாட்டத்தில் நேற்று ஆட்டநேரம் முடியும்போது தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரி 4 விக்கெட்டுக்களை இழந்து 49 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. ஸ்கந்தா 9விக்கெட்டுக்களை இழந்து 246 ஓட்டங்கள் பெற்ற நிலையில் ஆட்டத்தை நிறுத்தியிருந்தது.

ஸ்கந்தவரோதயக் கல்லூரி மைதானத்தில் நேற்று ஆரம்பமான ஆட்டத்தில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற ஸ்கந்தா அணி, துடுப்பாட்டத்தை ஆரம்பித்தது.

ஆரம்பத்திலேயே இரண்டு விக்கெட்டுக்களை ஸ்கந்தா இழந்தபோதும் அடுத்துவந்த வீரர்கள் அணியை சரியவிடாது நிமிர்த்தினர்.

முதல் ஆட்டத்தில் 55.5 ஓவர்களில் 9 விக்கெட்டுக்களை இழந்து 246 ஓட்டங்களைப் பெற்றிருந்தபோது, ஸ்கந்தா அணி ஆட்டத்தை நிறுத்திக்கொண்டது.

ஸ்கந்தா வீரர்களான ஏ.ஜெலன்ஸ் 86 ஓட்டங்களையும் கே.பென்ஜோய் 51 ஓட்டங்களையும் யோ.ரஜீவன் 31 ஓட்டங்களையும் ஆகக்கூடுதலாகப் பெற்றுக்கொடுத்தனர்.

மகாஜனா அணித் தலைவர் எம்.எல்மோநிக்சன் 17.5 ஓவர்கள் பந்துவீசி, இரண்டு ஓட்டமற்ற ஓவர்களுடன் 55ஓட்டங்களைக்கொடுத்து நான்கு விக்கெட்டுக்களையும் எம். கஜதீபன் 11 ஓவர்கள் பந்துவீசி இரண்டு ஓட்டமற்ற ஓவர்களுடன் 42 ஓட்டங்களைக் கொடுத்து இரண்டு விக்கெட்டுக்களையும் -

எம்.கோகுலதாஸ் ஆறு ஓவர்கள் பந்துவீசி 31 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

துடுப்பெடுத்தாடிய மகாஜனா அணி தமது முதலாவது ஆட்டத்தை ஆரம்பித்த சில நிமிட நேரத்திலேயே விக்கெட்டுக்களை இழக்கத் தொடங்கியது. ஆட்டநேர முடிவில் 15 ஓவர்களில் 4 விக்கெட்டுக்களை இழந்து 49 ஓட்டங்களைப் பெற்றது.

மகாஜனா சார்பில் துடுப்பெடுத்தாடிய எம்.கோகுலதாஸ் 17 ஓட்டங்களைப் பெற்றார்.

ஸ்கந்தா அணித்தலைவர் கே.நிரோஜன் 7 ஓவர்கள் பந்துவீசி ஓர் ஓட்டமற்ற ஓவருடன் 21 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டையும் கே.விஷ்ணுப்பிரகாஸ் 7 ஓவர்கள் பந்துவீசி இரண்டு ஓட்டமற்ற ஓவர்களுடன் 16 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

இன்று காலை 9 மணிக்கு ஆட்டம் தொடரும். (1-86)

## கொக்குவில் இந்து சம்பியனானது

யாழ்ப்பாணம், மார்ச் 8

நல்லூர் கல்விக் கோட்டப் பாடசாலை அணிகளுக்கிடையே இடம்பெற்ற 17 வயதுப் பிரிவினர்களுக்கான வலைப்பந்தாட்ட சுற்றுப் போட்டியில் கொக்குவில் இந்துக் கல்லூரி சம்பியனானது.

யாழ்.இந்து மகளிர் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற இறுதியாட்டத்தில் கொக்குவில் இந்துக் கல்லூரியும் அரியாலை கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயமும் மோதிக்கொண்டன.

போட்டி ஆரம்ப நேரம் முதல் முடிவடையும் வரை மைதானத்தில் கொக்குவில் இந்துக் கல்லூரியின் ஆதிக்கமே மேலோங்கி காணப்பட்டது.

போட்டி முடிவில் கொக்குவில் இந்துக் கல்லூரி 31:05 புள்ளிகள் என்ற அடிப்படையில் கனகரெத்தினம் மத்திய மகாவித்தியாலயத்தை வெற்றி கொண்டு நல்லூர் கல்விக்கோட்ட சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளது. (1-86)

# 'பொன் அணிகள் மோதல்' துடுப்பாட்டம்; பற்றிக்ஸ் 279 ஓட்டங்களைக் குவித்தது

## ஜோய் சிகான் 3 விக்கெட்டுக்களைச் சாய்த்தார்



யாழ்ப்பாணம்,மார்ச்07

'பொன் அணிகளின் மோதல்' துடுப்பாட்டத்தில் நேற்று ஆட்டநேரமுடிவில் யாழ்ப்பாணக்கல்லூரி 5 விக்கெட்டுக்களை இழந்து 54 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

முன்னதாக சென். பற்றிக்ஸ் கல்லூரி சகல விக்கெட்டுக்களையும் இழந்து 279 ஓட்டங்களைப் பெற்றது.

யாழ். சென். பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் நேற்றுக் காலை ஆரம்பமான ஆட்டத்தில் நாணயச் சுழற்சியில் யாழ்ப்பாணக் கல்லூரி வெற்றிபெற்றது. சென். பற்றிக்ஸ் அணியை துடுப்பெடுத்தாட அழைத்தது.

களமிறங்கிய சென். பற்றிக்ஸ் அணி சிறப்பாகத் துடுப்பெடுத்தாடி 69.3 ஓவர்களில் 279 ஓட்டங்களைக் குவித்தது.

சி.மிலான்டோ ஜெனிபர் அபாரமாக ஆடி 60 ஓட்டங்களைக் குவித்தார். எம்.ஜே.மனோஜ் 48 ஓட்டங்களையும் எம்.வி. கமில்ரன் 45 ஓட்டங்களையும் பி.நவதீபன் 44 ஓட்டங்களையும் அணிக்குப் பெற்றுக்கொடுத்தனர்.

ஜே.நிகேதன் 15 ஓவர்கள் பந்துவீசி 32 ஓட்டங்களைக் கொடுத்து 2 விக்கெட்டுக்களையும் -

வி.கஜேந்தன் 10 ஓவர்கள் பந்துவீசி 45 ஓட்டங்களைக் கொடுத்து 2 விக்கெட்டுக்களையும் -

ஜே.செந்தூரன் 19.3 ஓவர்கள் பந்துவீசி 73 ஓட்டங்களைக் கொடுத்து 2 விக்கெட்டுக்களையும் -

வி.ஜோய் சிகான் ஒன்பது ஓவர்கள் பந்துவீசி 32 ஓட்டங்களைக் கொடுத்து மூன்று விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய யாழ்ப்பாணக் கல்லூரி அணி ஆட்டநேரமுடிவில் 5 விக்கெட்டுக்களை இழந்து 54 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

ஆட்டம் இன்று காலை 9 மணிக்கு ஆரம்பமாகும்.

(1-302-111-68)




## ஓய்வு பற்றிச் சிந்திக்கவில்லை

### சச்சின் பேட்டி

புதுடில்லி, மார்ச் 08

சர்வதேச கிரிக்கெட் போட்டிகளில் இருந்து ஓய்வு பெறுவது குறித்து தற்போது நினைத்துக் கூடப் பார்க்கவில்லை என்று இந்திய அணியின் முன்னணித் துடுப்பாட்ட வீரரான சச்சின் டெண்டுல்கர் கூறியுள்ளார்.

இதுகுறித்து அவர் கூறியவை வருமாறு:-

''இன்றைய நிலையில் ஓய்வு பெறுவது பற்றி நினைத்துக் கூடப் பார்க்கவில்லை. ஊடகங்களில்தான் இதுபற்றிப் பல வதந்திகள் வருகின்றன. நான் ஓய்வு பெறப்போவது பற்றி உங்களுக்கு ஏதாவது தெரிந்தால் எனக்குச் சொல்லுங்கள். என்னைப் பொறுத்தவரை நான் ஓய்வுபெறப் போவதில்லை.

''விமர்சித்து எழுதப்படும் கட்டுரைகளைப் படிப்பதே இல்லை. அதனால்தான் எனக்கு எந்தப் பாதிப்பும் ஏற்படுவதில்லை. எது சரி, எது தவறு என்பதை உணர்ந்து கொள்ளும் பக்குவம் உள்ளது. உண்மையான நண்பர்கள் எனக்கு உடனடியாகத் தவறைச் சுட்டிக்காட்டுவார்கள். இளம் வீரர்களுடன் விளையாடுவது புத்துணர்வு அளிக்கிறது.'' - இவ்வாறு சச்சின் கூறியுள்ளார்.

நியூஸிலாந்துடனான முதல் டெஸ்ட்

# இங்கிலாந்து நிதான ஆட்டம்



பந்துவீச்சில் அபார பிடியெடுப்பின் மூலம் கைப்பற்றிய விக்ரோறி

ஹமில்ரன், மார்ச் 08

நியூஸிலாந்துக்கு எதிரான முதல் டெஸ்டின் முதல் இன்னிங்ஸில் இங்கிலாந்து அணி மிகவும் நிதானமாக ஆட்டத்தைக் கொண்டு செல்கின்றது. நேற்றைய மூன்றாம் நாள் ஆட்டத்தில் 93 ஓவர்களை எதிர்கொண்ட அந்த அணி 199 ஓட்டங்களை மட்டுமே சேர்த்தது. அத்துடன் நான்கு முக்கிய விக்கெட்டுகளையும் பறிகொடுத்தது. அதன்படி நேற்றைய மூன்றாம் நாள் ஆட்டநேர முடிவில் இங்கிலாந்து அணி அதன் முதலாவது இன்னிங்ஸில் 6 விக்கெட்டுகள் இழப்புக்கு 286 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

ஹமில்ரனில் நடைபெறுவரும் இந்த டெஸ்ட் போட்டியின் முதல் இன்னிங்ஸில் நியூஸிலாந்து அணி ரோஸ் ரெய்லரின் சதத்தின் உதவி கொண்டு 470 ஓட்டங்களைச் சேர்த்திருந்தது. பதிலளித்துத் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணி இரண்டாம் நாள் ஆட்டநேர முடிவில் தனது முதல் இன்னிங்ஸில் 2 விக்கெட்டுகள் இழப்புக்கு 87 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

நேற்று போட்டியின் மூன்றாம் நாள் ஆட்டம் நடந்தது. களத்தில் நின்ற மைக்கல் வோகன், அன்ட்ரூ ஸ்ரோரஸ் ஆகியோர் மிகவும் பொறுமையாக ஆடி ஓட்டங்களைச் சேர்த்தனர். 127 பந்துகளை எதிர்கொண்டு தனது 18ஆவது டெஸ்ட் அரைச்சதத்தைப் பூர்த்தி செய்தார் வோகன்.

3ஆவது விக்கெட்டில் 23 ஓவர்களில் 44 ஓட்டங்கள் சேர்க்கப்பட்டிருந்த நிலையில் மைக்கல் வோகன் 63 ஓட்டங்களுடன் (177 பந்துகள், 8 பவுண்டரிகள்), ஜீற்றன் பட்டேலிடம் விக்கெட்டைப் பறிகொடுத்தார். தொடர்ந்து டானியல் விக்ரோறி சுழலில் அச்சுறுத்த ஸ்ரோரஸ் 43 ஓட்டங்களுடன் 'போல்ட்' ஆனார்.

5ஆவது விக்கெட்டில் இணைந்த இயன் பெல் - கெவின் பீற்றர்ஸன் ஜோடியும் நிதான ஆட்டத்தைத் தொடர்ந்தனர். இவர்கள் தம்மிடையே 44 ஓட்டங்களைச் சேர்த்திருந்த நிலையில், மில்ஸின் வேகத்தில் இயன் பெல் 'போல்ட்' ஆனார். தொடர்ந்து விக்ரோறியின் அற்புத சுழலில் அவரின் அபார பிடியெடுப்பில் பீற்றர்ஸன் பவிலியன் திரும்பினார்.

நேற்றைய மூன்றாம் நாள் ஆட்டநேர முடிவில் இங்கிலாந்து அணி 6 விக்கெட்டுகள் இழப்புக்கு 286 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. கொலிங்வூட் 41 ஓட்டங்களுடனும், ரிம் அம்புரோஸ் 23 ஓட்டங்களுடனும் களத்தில் உள்ளனர். இங்கிலாந்து அணி முதல் இன்னிங்ஸில் நியூஸிலாந்து அணியை விட 148 ஓட்டங்களால் பின்தங்கியுள்ளது.

இன்று போட்டியின் நான்காம் நாள் ஆட்டம் தொடரும்.

# சுட்டது புலிகள் அமைப்பினரே! இலங்கைத் தூதரகம் அறிக்கை

சென்னை,மார்ச்.08

கச்சதீவுப் பகுதியில் தமிழக மீனவரைச் சுட்டுக் கொன்றது இலங்கைக் கடற்படை அல்ல என்று கூறியுள்ள சென்னையில் உள்ள இலங்கைத் தூதரகம், இச்சம்பவத்துடன் விடுதலைப் புலிகளே சம்பந்தப்பட்டிருக்கின்றனர் என்றும் குற்றம் சாட்டியுள்ளது.

அத்துடன் துப்பாக்கிச் சூடு நடந்த சமயத்தில் கச்சதீவுக் கடற்பகுதியில் இலங்கைக் கடற்படை கப்பல்கள் எதுவும் செல்லவில்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

கச்சதீவுக் கடல்பகுதியில் நேற்று முன்தினம் தமிழக மீனவர் சுட்டுக்கொல்லப்பட்டமை குறித்து சென்னையில் உள்ள தென் இந்தியாவுக்கான இலங்கைத் தூதரகம் வெளியிட்டு உள்ள செய்திக் குறிப்பில் கூறப்பட்டிருப்பவை வருமாறு:-

இலங்கைக் கடற்படையினரால் மேற்கொள்ளப்பட்டதாகக் கூறப்படும் துப்பாக்கிச் சூட்டினால் தமிழக மீனவர் ஒருவர் இறக்க நேரிட்டதும், இன்னொருவர் காயம் அடைந்ததும் பற்றி வெளிவந்துள்ள செய்திகள் எங்கள் கவனத்தை ஈர்த்துள்ளன. இந்தச் செய்திகள் உடனடியாக இலங்கைக் கடற்படையினரின் கவனத்துக்குக் கொண்டு செல்லப்பட்டது. அத்துடன், இந்தச் சம்பவம் தொடர்பாக கடற்படையினரிடம் தீவிர விசாரணையும் நடத்தப்பட்டது. இந்த விசாரணையில், துப்பாக்கிச் சூடு நடந்த கடல் பகுதியில் இலங்கைக் கப்பல்கள் எவையும் அந்தச் சந்தர்ப்பதில் செல்லவில்லை என்று இலங்கைக் கடற்படை திட்டவட்டமாகத் தெரிவித்து உள்ளது.

தமக்கு எதிராகச் சுமத்தப்பட்டுள்ள இந்தச் குற்றச்சாட்டுக்களை, இலங்கைக் கடற்படை ஆணித்தரமாகவும், சந்தேகத்துக்கு இடமின்றியும் மறுத்துள்ளது. - இவ்வாறு தென் இந்தியாவுக்கான இலங்கைத் தூதரகம் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளது.

# புலிகள் சுட வாய்ப்பில்லை காயமடைந்த மீனவர் தகவல்



மதுரை,மார்ச்.08

தங்களை விடுதலைப் புலிகள் சுடுவதற்கு வாய்ப்பில்லை என்று அடித்துக் கூறியுள்ளார் காயமடைந்த மீனவர் பிரான்சிஸ். அத்துடன் இலங்கைக் கடற்படையினரே தம் மீது சூடு நடத்தினர் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் செய்தியாளர்களிடம் பிரான்சிஸ் கூறியவை வருமாறு:-

''கடந்த புதன்கிழமை இரவு 7.30 மணிக்கு தனுஷ்கோடி பகுதியில் மீன் பிடிக்கச் சென்றோம். படகை என் சகோதரி மகன் ராஜா ஓட்டினார். நான் கஞ்சி சாப்பிட்டு விட்டு கை கழுவியபோது திடீரென்று எங்கள் படகு மீது சரமாரியாக துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டது. அனைவரும் கீழே குனிந்துக் கொண்டனர். நானும் குனிய முயற்சித்தபோது அடி முதுகில் தோட்டா ஒன்று பாய்ந்து 'சுள்ளென்று' வலி ஏற்பட்டது. 'வயிற்றுப் பகுதியில் லேசான காயம் ஏற்பட்டது. இருட்டாக இருந்ததால் யார் சுட்டனர் எனத் தெரியவில்லை. இலங்கைக் கடற்படையினர் தான் சுட்டிருக்க வேண்டும். விடுதலைப் புலிகள் சுட வாய்ப்பில்லை. நமது எல்லைப் பகுதியிலேயே எங்களுக்கு பாதுகாப்பற்ற நிலை உள்ளது.'' - இவ்வாறு பிரான்சிஸ் கூறினார்.

# சிவநேசன் கொலைக்கு நோர்வே கண்டனம்

நோர்வே, மார்ச். 08

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கிட்டினன் சிவநேசன் படுகொலை செய்யப்பட்ட சம்பவத்தை நோர்வே அரசு கண்டித்திருக்கிறது.

நோர்வே வெளியிட்டிருக்கும் இரங்கல் செய்தியில் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு:-

நாடாளுமன்ற உறுப்பினர்கள் மீதான தாக்குதலானது இலங்கையின் ஜனநாயக மரபுகளைநிச்சயம் குழிதோண்டிப்புதைக்கும்.

தொடரும் வன்முறைகளுக்கு முற்றுப்புள்ளி வைக்க இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண்பது அவசியமானதாகும்.

படுகொலை செய்யப்பட்ட கி. சிவநேசன் மற்றும் அவரது வாகனச் சாரதி பெரியண்ணன் மகேஸ்வரராஜா ஆகியோரது குடும்பத்தினருக்கு நோர்வே அரசு தனது ஆழ்ந்த இரங்கல்களை தெரிவித்துக்கொள்கின்றது என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (சி)

# இலங்கை மிகக் கடுமையான அழுத்தங்களை எதிர்நோக்கலாம் என அவதானிகள் கருத்து

கொழும்பு, மார்ச்.08

இலங்கையின் மனித உரிமை நிலைவரம் குறித்து வியாழக்கிழமை சர்வதேச மனித உரிமைகள் கண்காணிப்பகமும் சர்வதேச சுயாதீனப் பிரமுகர்கள் குழுவும் விடுத்துள்ள அறிக்கைகளை இலங்கை அரச அதிகாரிகள் நிராகரித்துள்ள போதிலும், அரசுக்கு இவற்றினால் கடும் அழுத்தம் ஏற்படலாம் என சர்வதேச அவதானிகள் கருத்து வெளியிட்டிருக்கின்றனர்.

மோசமான மனித உரிமை மீறல் சம்பவங்கள் குறித்து இடம்பெறும் ஆணைக்குழு விசாரணையைக் கண்காணிக்கும் பொறுப்பிலிருந்து சர்வதேச,சுயாதீனப் பிரமுகர்கள் குழு விலகிக் கொண்டுள்ளமையும் -

இலங்கை நிலைவரம் தொடர்பாக மனித உரிமைகள் கண்காணிப்பகம் நேற்று முன்தினம் வெளியிட்ட மிகக் காட்டமான அறிக்கையும் -

இலங்கையில் ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் கண்காணிப்பகத்தை ஏற்படுத்த வேண்டுமென்ற வேண்டுகோளை மேலும் வலுப்படுத்தும் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

சர்வதேச சுயாதீனம் பிரமுகர்கள் அணி இலங்கையின் நலன்களுக்கு எதிராகச் செயற்பட்டுள்ளதுடன் இலங்கைக்கு எதிரான சர்வதேச சமூகத்தின் கண்டனங்களை ஊக்குவிப்பதற்கும் முயற்சிப்பதாக இலங்கையின் சட்டமா அதிபர் குற்றம் சாட்டியுள்ளார்.

ஜனாதிபதி மஹிந்த ராஜக்ஷ மேற்படி விசாரணைக் கண்காணிப்புக்கு புதிய சர்வதேச விசாரணைக்குழு ஒன்றை நியமிக்கக் கூடும் என்றும் சட்டமா அதிபர் கோடிகாட்டியிருக்கின்றார்.

இலங்கைக்கு எதிராக சர்வதேச மனித உரிமைகள் கண்காணிப்பகத்தின் கடும் குற்றச்சாட்டு அறிக்கையில் உள்ளவை மிகைப்படுத்தப்பட்ட [illegible] டுகள் எனத் தெரிவித்து அ[illegible] டதாக வெளிவிவகார அமைச்சின் செயலாளர் பாலித கோஹண தெரிவித்[illegible]ார்.

"குறிப்பிட்ட அறிக்கையில் இலங்கையில் நிமிடத்திற்கு நிமிடம் மோசமடையும் சூழ்நிலை குறித்து தெரிவிக்கப்பட்டுள்ளது. நான் இது நேர்மையற்றதெனவும் விசமத்தனமானதென்றும் கருதுகிறேன்." - என அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, சர்வதேச சுயாதீனப் பிரமுகர்கள் அணி, சர்வதேச மனித உரிமைகள் கண்காணிப்பகம் - ஆகிய இரண்டுமே ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் கவுன்ஸிலின் கூட்டத்தொடர் இடம்பெறும் வேளை இவ்வாறான அறிக்கைகளை வெளியிட்டமை திட்டமிட்ட-உள் நோக்கம் கொண்ட - நடவடிக்கை என இலங்கை சமா தான செயலகம் குற்றம் சாட் டியுள்ளது. (உ)

# நேற்றுமுன்தின மோதல்களில் நால்வர் பலி; 31 பேர் படுகாயம்

## படைத்தரப்பில் தெரிவிப்பு

கொழும்பு, மார்ச் 08

வடக்கின் களமுனைகளில் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் அரச படையினருக்கும் இடையில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற மோதல் சம்பவங்களில் நான்கு படையினர் கொல்லப்பட்டனர் என்றும் 31 பேர் படுகாயமடைந்தனர் என்றும் படைத்தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

மன்னார் பெரிய பண்டிவிரிச்சான், உள்ளிக்குளம், மூன்றுமுறிப்பு மற்றும் அடம்பன் பகுதிகளில் இடம்பெற்ற மோதல்களில் விடுதலைப் புலிகளில் எழுவர் உயிரிழந்தனர் என்றும் தமது தரப்பில் ஆறு பேர் படுகாயமடைந்தனர் என்றும் -

மணலாறு ஆண்டான்குளம் மற்றும் கொக்குத்தொடுவாய்ப் பகுதியில் இடம்பெற்ற மோதல்களில் விடுதலைப் புலிகளில் நால்வர் உயிரிழந்தனர் என்றும், தமது தரப்பில் நால்வர் உயிரிழந்தனர் என்றும், 10 பேர் காயமடைந்தனர் என்றும் -

நாகர்கோவில் மற்றும் கிளாலிப் பகுதியில் இடம்பெற்ற மோதல்களில் விடுதலைப் புலிகளில் மூவர் உயிரிழந்தனர் என்றும் அவர்களின் பதுங்குகுழிகள் அழிக்கப்பட்டன என்றும் அவர்களால் புதைக்கப்பட்ட நிலக் கண்ணிவெடிகளில் சிக்கி படைச் சிப்பாய் ஒருவர் காயமடைந்தார் என்றும் படைத்தரப்பினால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த மோதல் சம்பவங்கள் தொடர்பாக புலிகள் தரப்பில் அறிவிப்பு எதுவும் வெளிவரவில்லை. (சி)

## மரண அறிவித்தல்

### திருமதி அந்தோனிமுத்து அக்கினேஸ் தவமணி



ஏழாலை தெற்கைப் பிறப்பிடமாகவும் புனித இசிதோர் ஆலயத்தைச் சேர்ந்தவருமான திருமதி அந்தோனிமுத்து அக்கினேஸ் தவமணி அவர்கள் (06.03.2008) வியாழக்கிழமை கொழும் பில் காலமானார்.

அன்னாரின் பூதவுடல் இல.204, ஏழையரின் சிறிய சகோதரிகள் மடம் (புனித சூசையப்பர் கல்லூரிக்கு அருகில்) டார்லி வீதி, மருதானையில் இறுதி அஞ்சலிக்காக வைக்கப்பட்டு அடக்கச் சடங்குகள் நாளை (09.03.2008) ஞாயிற்றுக்கிழமை பி.ப. 3 மணிக்கு திருப்பலிக்குப்பின் பொரளை கத்தோலிக்க சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

இல.204, டார்லி வீதி,
மருதானை.
தொ.பே.0776442600

தகவல்:
பிள்ளைகள், பேரப்பிள்ளைகள்
அருட்தந்தை R.M.G. நேசநாயகம்
(தம்பி)

## கிழக்கு மாகாண சபை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி )

மாவட்ட உள்ளூராட்சித் தேர்தல் நாளை மறுதினம் நடைபெறுகின்றது. அது நடைபெற்று முடிந்து ஒரு வாரத்தில் - அதாவது இம்மாதம் 16ஆம் திகதி அளவில் - கிழக்கு மாகாண சபைக்கான தேர்தல் பற்றிய உத்தியோகபூர்வ அறிக்கையை வெளியிட இப்போது தீர்மானமாகியிருப்பதாக நம்பிக்கையாக அறிய வந்தது.

தேர்தல் அறிவிப்பு வெளியாகி இரண்டு வார காலத்துக்குள் வேட்புமனு ஏற்கும் திகதி ஆரம்பமாகும்.

வேட்புமனுவை ஏற்பதற்கான காலம் முடிவடைந்து பெரும்பாலும் ஐந்து முதல் ஏழு வார காலத்தில் வாக்களிப்பு இடம் பெறும் என்றும் அறியவந்துள்ளது.

வெசாக் முடிந்த பின்னர் மே 20ஆம் திகதிக்கும் 25ஆம் திகதிக்கும் இடையில் - பெரும்பாலும் மே 23ஆம் திகதியன்று - வாக்களிப்பை நடத்துவதற்கு தேர்தல் திணைக்கள வட்டாரங்கள் பூர்வாங்கமாகத் தீர்மானித்திருக்கின்றன என்றும் அறிய வந்துள்ளது.

கிழக்கு மாகாண சபைத் தேர்தல்களை நடத்துவதற்கான உத்தியோக பூர்வ வழிகாட்டுதல்கள் அரச மேலிடத்திலிருந்து கிடைத்திருக்கின்றமையை அடுத்து தேர்தலுக்கான முன்னேற்பாடுகளில் தேர்தல் திணைக்களம் சுறுசுறுப்பாகக் குதித்திருப்பதாகவும் திணைக்கள வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன. • (உ)

## சிவநேசனின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி )

சிவநேசனின் பூதவுடல் இன்றும் நாளையும் இங்குள்ள பல இடங்களில் வீர வணக்க நிகழ்வுகளுக்காக வைக்கப்பட்டு அஞ்சலி செலுத்தப்படும் என்றும் வன்னித் தகவல்கள் தெரிவித்தன.

சிவப்பு, மஞ்சள், கறுப்புக் கொடிகள் பறக்கவிடப்பட்டுள்ளன. சோக கீதங்கள் இசைக்கவிடப்பட்டு துக்கம் அனுஷ்டிக்கப்படுகின்றது.

சிவநேசனின் இறுதி நிகழ்வில் கலந்து கொள்வதற்காக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பல எம்.பிக்கள் நேற்று கொழும்பிலிருந்து வன்னிக்குப் புறப்பட்டுச் சென்றனர்.

இதேவேளை. வடமராட்சி, கரவெட்டியில் அமைந்துள்ள சிவநேசனின் சொந்த வீட்டிலும் மக்கள் திரண்டு அஞ்சலி நிகழ்வில் ஈடுபட்டு வருகின்றனர். (அ - 70)

## மகேஸ்வரன் கொலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி )

### ஹெகலிய வாக்குமூலம்

மேற்படி படுகொலைச் சம்பவத்தை அடுத்து அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல ஊடகங்களுக்கு அளித்த பேட்டி தொடர்பாக அவரிடம் தாங்கள் வாக்குமூலம் ஒன்றைப் பதிவு செய்திருக்கின்றனர் எனக்கொழும்பு குற்றத் தடுப்புப் பொலிஸ் பிரிவினர் நீதிமன்றத்தில் தெரிவித்தனர்.

மகேஸ்வரனின் உறவினர் ஒருவர், இக்கொலைச் சம்பவத்தை ஒட்டி தங்களுக்குத் தரவேண்டிய தகவலை தங்களுக்குத் தராமல் அது குறித்து பி.பி.ஸிக்கு பிரஸ்தாபித்திருக்கின்றார் என்றும் பொலிஸார் நீதிமன்றத்தில் நேற்று குறை கூறினார். (சி)

N.C.A வெளியீடு
கே.கே.எஸ்.றோட், இணுவில்.
1ஆம் தவணை பரீட்சை - 2008
தரம் 04 முதல் O/L வரை
பரீட்சை ஆரம்பம்:-
08.03.2008
சனி (இன்று) 7.30 am
* வினாத்தாள்கள் தேவைப்படுவோர் தொடர்பு கொள்ளவும்.
N.C.A கல்வி நிலையம்,
இணுவில்.
0773618459, 0776241573

தரம்: 5 புலமைப் பரிசில்
வெற்றித்தேர்வு திருமலை S. கணேசலிங்கம் அவர்களின்
வெற்றித்தேர்வு வினாத்தாள்: 1 2 3 4 5 6 7 8
திங்கள் சகல புத்தக சாலைகளிலும்.
வெற்றித்தேர்வு தொடராகத் தேவையானோர். 021 222 9016
வெற்றித்தேர்வு 8 மாவட்ட ரீதியிலான பரீட்சை
நாளை ஞாயிறு
பொருத்தமான நேரத்தில் எத்தனை வெளிமாணவர்களும் பரீட்சை எழுதலாம்
6am, 8am, 10am, 2pm, 4pm
கட்டணம் ரூபா:30மட்டும்
பரீட்சை நடைபெறும் இடங்கள்.
நல்லூர் சயன்ஸ் அக்கடமி
பிறைற்மன் கல்வி நிறுவனம்
குகன் கல்வி நிறுவனம்,ஆவரங்கால்
ஈச்சமோட்டை ஷாம்றோக் கல்வி நிறுவனம்.
தரம்:4முதல் O/L வரை
முதலாந் தவணைப் பரீட்சை-2008
வெள்ளி முதல் விற்பனையாகும்.
முன்னணி ஆசிரியர்களின் தயாரிப்பில்
புதிய பாடத்திட்டம் அடங்கிய வினாப்பத்திரம்
பூபாலசிங்கம் புத்தகசாலை
சுன்னாகம் துர்க்கா புத்தகசாலை

## சிவநேசனுக்கு மாமனிதர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி )

உழைத்தவர். அனைவருடனும், அன்பாகவும், பண்பாகவும் நடந்துகொள்ளும் ஒரு உயரிய பண்பாளர்.

இவர் தமிழீழ மண்ணின் விடிவையும் தமிழீழ மக்களின் விடுதலையையும் தனது வாழ்வின் இலட்சியமாக வரித்துக்கொண்டவர். தமிழ் மக்கள் தமது சொந்தத் தாயக மண்ணில் இன்னல்கள் நீங்கி, இடர்கள் அகன்று, சுதந்திரமாக, நிம்மதியாக வாழவேண்டும் என்று ஆவல் கொண்டவர். தமிழீழ மண்ணை ஆழமாக நேசித்தவர். அந்த மண் ஒரு சுதந்திர தேசமாக மலர்வதைக் காணத் துடித்தவர். இந்தத் துடிப்பில் உயிர்ப்புப் பெற்று, எமது விடுதலை இயக்கத்தையும், அதன் அரசியல் இலட்சியத்தையும், அதனை அடைவதற்கு நாம் நெறிப்படுத்தியுள்ள போராட்டப்பாதையையும் முழுமையாக ஏற்று பெரும் விடுதலைப் பணியாற்றியவர்.

யாழ். மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் நாடாளுமன்றப் பெரும் பொறுப்பைச் சுமந்தவாறு உலகெங்கும் அலைந்து, எமது தேசிய விடுதலைப் போராட்டத்துக்கு நியாயம் தேடினார். மக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தி எமது விடுதலைப் போராட்டத்திற்கு ஆதரவாக மக்களை அணி திரட்டினார். சிங்கள அரசும் அதன் ஆக்கிரமிப்புப் படைகளும் எமது மண்ணில் நிகழ்த்தும் அநியாயங்களையும், அட்டூழியங்களையும் உலகிற்கும், ஊடகங்களுக்கும் தெளிவாக எடுத்துக் கூறினார். சிங்களப் படைகளின் கெடுபிடிகளுக்கும் மத்தியிலும் அஞ்சா நெஞ்சுடன் அநீதியை எதிர்த்துப் போராடினார். கடும் உழைப்பாலும், செயற்திறனாலும் தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்கு அன்னார் ஆற்றிய அரும் பணி அளப்பரியது.

கிட்டினன் சிவநேசனின் இனப்பற்றுக்கும், விடுதலைப் பற்றுக்கும் மதிப்பளித்து அவரது விடுதலைப் பணியை கௌரவிக்கும் முகமாக 'மாமனிதர்' என்ற அதியுயர் தேசிய விருதை அவருக்கு வழங்குவதில் நான் பெருமையடைகிறேன். சத்திய இலட்சியத்துக்காக வாழ்ந்த உயர்ந்த மனிதர்களை சாவு என்றும் அழித்துவிடுவதில்லை. சரித்திர நாயகர்களாக, எமது தேசத்தின் ஆன்மாவில் அவர்கள் என்றும் வாழ்வார்கள். - என்று அந்த அறிக்கையில் உள்ளது. (சி)

## மட்டு தேர்தல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி )

அலுவலகத்தின் சிரேஷ்ட அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாநகரசபை மற்றும் எட்டு பிரதேச சபைகளுக்கான இத்தேர்தலில் 101 உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்படவுள்ளனர். இதற்காகப் பல்வேறு சுயேச்சைக் குழுக்கள் மற்றும் அரசியல் கட்சிகளைச் சேர்ந்த 831 பேர் களத்தில் உள்ளனர். (உ)

முக்கிய அறிவித்தல்
2007 க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் தோற்றி தகவல் தொலிநுட்ப உளச்சார்பு பரீட்சைக்கு விண்ணப்பித்த மாணவர்களை 09.03.2008 முதல் யாழ் Science Hall நிர்வாகத்துடன் தொடர்புகொள்ளும்படி கேட்டுக்கொள்ளப்படு கிறார்கள்.
நிர்வாகி:- NEW SCIENCE HALL, JAFFNA.
(551746)

Hatton National Bank
அடகுப் பொருள்கள் ஏல விற்பனைக்கான அறிவித்தல்
ஹற்றன் நஷனல் வங்கி யாழ்ப்பாணம், சுன்னாகம், நெல்லியடி, ஸ்ரான்லி வீதி, மானிப்பாய் ஆகிய கிளைகளில் 31.12.2006 இற்கு முன்னர் அடகு வைத்து இதுவரை மீட்கப்படாத, காலாவதித் திகதியை நீடிக்க ஆவண செய்யாத வாடிக்கையாளரின் அடகு நகைகள் 15.03.2008 சனிக்கிழமை காலை 9 மணிக்கு இல. 212, 214, ஆஸ்பத்திரி வீதியில் அமைந்துள்ள யாழ்.கிளையில் ஏலத்தில் விடப்படும் என்பதை அறியத்தருகின்றோம்.
உங்கள் பெறுமதிமிக்க பொருள்களை உடனே மீட்க முடியாவிட்டால் ...
★ கடனுக்குரிய வட்டியையும் கடனின் ஒரு பகுதியையும் (ரூபா.500) செலுத்தி
அல்லது
★ தற்போதைய சந்தைப் பெறுமதிக்கும் அதிகரித்த கடன் தொகைக்கும் ஏற்ப உங்கள் அடகுப் பொருள்களை மீள அடகு வைத்து காலாவதித் திகதியை நீடித்துக் கொள்ளலாம்.
ஏல விற்பனைத் திகதியினை பிற்போடும் மற்றும் ஏலத்தினை இரத்துச் செய்யும் உரிமைகள் வங்கிக்கு உண்டு
- ஹற்றன் நஷனல் வங்கி
(வி/551745)

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 08.03.2008 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.